1269

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்

# திருவகத்தியான்பள்ளி

## மான்மியம்

வேதாரணியம்

சோம. கணபதி தேசிகர் அவர்கள்

இயற்றியது

ம... ...ப்பண் அச்சியந்திரசாலையில்
...க்கப்பட்டது.

ஒ2க
N33
178223

1269

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 SEP 1933
MADRAS

உ

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

# திருவகத்தியான்பள்ளி

## மான்மியம்,

---

ஷை திருவகத்தியான்பள்ளி,
ஆலயத்திருப்பணி நடத்திவரும்

தேவகோட்டை,
பழ.சோம.சோமசுந்தரஞ்செட்டியாரவர்கள்
விரும்பியவாறு

வேதாரணியம்
சோம-கணபதிதேசிகர் அவர்களியற்றியது.

செந்தமிழ்ச் செல்வி
அருஞ்செய்யுட் பொருட்பகுதி
உரையாசிரியர்
சென்னை
கொ. இராமலிங்கத்தம்பிரானவர்களால்
பார்வையிடப்பெற்று,

ஷை பழ. சோம.
சோமசுந்தரஞ்செட்டியாரவர்களால்

சென்னை
ரிப்பன் அச்சியந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

ஸ்ரீமுக௵ ஆனிமீ

1269

# முகவுரை.

## செந்தமிழ்ச் செல்வர்காள்!

நம் தமிழ் உலகத்தில் புராணம் ஏற்பட்டகாலத்தில், புலவர் பெருமான்களால் செய்யப்பட்ட புராணங்கள் யாவும் செய்யுள் நடையாகவே முடிந்தன. அவை கற்றோர்க்கன்றி ஏனையோர்க்குப்பொருள் விளங்காமையால், இத்திருவகத்தியான்பள்ளிப் புராணத்தை, காவேரிப்புராணம், கீழ்வேளூர்ப்புராணம்முதலிய நூல்களியற்றிய வேதாரணியம், திருச்சிற்றம்பல முனிவர்பௌத்திரராகிய சோம. கணபதி தேசிகர் அவர்கள், கற்றோர்க்கும் மற்றோர்க்கும் பயன்படும் பொருட்டு ஆகிபுராணங் களிலிருந்து மொழிபெயர்த்துச் சொற்சுவைபொருட்சுவையுடன் கத்திய ரூபமாகச் செய்தனர். இது, படிப்பவருடைய மனத்திற்கு உள்ளக்கிளர்ச்சியையும்ஈசுவரபக்தியையும்உண்டாக்கும். நான்உற்றுநோக்குந் தோறும் இந்நூல் வியக்கத்தக்கதாயும் இனிமையாயுமிருக்கின்றது. இந்நூலில் தலம், தீர்த்தம், மூர்த்தி இவைகளுடைய பெருமைகள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

யாவர்க்கும் பயன்படும்பொருட்டு தேவகோட்டை பழ. சோம. சோமசுந்தரஞ்செட்டியார் அவர்கள் விருப்பத்தின்படியும், அவரது பொருள் உதவியினாலும், இந்நூல் செய்யப்பெற்று, அச்சிடுவித்து வெளிப்படுத்தப் பட்டது. இவர் செய்த நன்றியைத் தமிழுலகம் பாராட்டற் பாலது.

இப்படிக்கு,

சென்னை, கொ. இராமலிங்கத்தம்பிரான்

தமிழ்ப் பண்டிதர்.

# அத்தியாய அட்டவணை.

௧. வரலாறுரைத்த அத்தியாயம்.

௨. அகத்திய முனிவர் பூசித்த அத்தியாயம்.

௩. திருமணக் கோலங்கண்ட அத்தியாயம்.

௪. அக்கினிதேவன் சாபம் நீங்கிய அத்தியாயம்.

௫. அத்திரி முனிவர் பேறுபெற்ற அத்தியாயம்.

௬. தருமராசன் சீவன்முத்தித்திறம்பெற்ற அத்தியாயம்.

௭. துவாத சாதித்தர் பேறுபெற்ற அத்தியாயம்.

௮. அக்கினி தேவன் வரம்பெறு அத்தியாயம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
1 SEP 1933
MADRAS

உ
சிவமயம்
கணபதி துணை
திருச்சிற்றம்பலம்

# திருவகத்தியான்பள்ளி மான்மியம்

## கடவுள் வாழ்த்து

### காப்பு

திங்களுங் கங்கை யாறுந் திருமுடி கொண்டோன் றூணு
மங்கையு மகிழ்வோ டீன்ற வாரண முகத்து வள்ளல்
பொங்குபே ரியல்பு போற்றப் பொற்குட முனிவன் பள்ளி
மங்கள மான்மி யத்தை வழுத்திட வருள்வன் மாதோ.

### அகத்தீ யேசுரர்

காரவிர் களமே காட்டக் கருணையைக் கையின் வண்மை
போறஞ் செய்த நங்கை பெற்றிடு நெல்லே காட்டச்
சீர்பெறுந் தேவர் பெற்ற செல்வத்தாற் செல்வங் காட்டி
யார்கலி யுண்டோன் பள்ளி யமர்ந்திடு மெந்தாய் போற்றி.

### பாகம் பிரியாளம்மை

ஆவிக ளெவையு மீன்ற வன்னையே யன்ப ருள்ளப்
பூவியற் கோயி லின்கண் பொருந்திடு மாறு போலத்
தாவில்சீ ரகத்தி யேசன் றன்னிடம் பிரியா நங்கை
பூவடிப் போதை யென்றும் புந்தியிற் கொண்டு வாழ்வாம்.

## வாத விநாயகர்

இந்திரன் வேண்ட வன்று விருந்தவன் கமண்ட லத்தை
ஊந்தியே கவிழ்த்து மீண்டும் முனிவனுக் கருளும் வள்ளல்
விந்தம தடக்கி வென்றோன் மேவிடும் பாழி மீதே
வந்தமர் வாதயானை வதனனை வணக்கஞ் செய்வாம்.

## சுப்பிரமணியக் கடவுள்

தாயொடு தந்தை வேண்டாத் தனிப்பெருஞ் சோதி தானு
நேயமார் குருவாய்க் கொண்ட நேர்மையை யாருந் தேர்வார்
பாய்திரைப் பௌவ முண்டோன் பகர்பெருங் குருவே யாய
நாயக முருக கந்த நன்மண வாளா போற்றி.

## சபாநாயகர்

படைத்தினி தளித்துப் போக்கிப் பயனையே மறைத்து ஊட்டித்
தடைப்படாப் பெரிய வின்பந் தனையரு ணடனந் தன்னைச்
சடைத்தலை முடியிற் கங்கை சந்திர னரவு கொன்றை
யுடக்கியே யம்மை காண வாடுமெம் பலவா போற்றி.

## தக்ஷிணா மூர்த்தி

அறிவினுட் டலைமை யாய வறிவுறு நால்வர்க் கன்று
கறையறு ஞான போதங் கைமலர்க் காட்சி யாலே
குறைவற வுணர்த்து மோனக் குணப்பெருங் கடலாம் யார்க்கு
மிறையெனுங் குருமூர்த் தத்தி னிணையடி முடிமேற் கொள்வாம்.

## திருமகள்

உலகினர் யாருந் தேறி யுவந்தினி துற்று வாழ
வலகில்சீர் செல்வ மாதி வாழ்வெலா மருளு நங்கை
தலமெலாங் காக்குங் கோமான் றன்மனை யாகி யென்றும்
மலரகந் தன்னில் வாழ்மா மங்கையைப் பணிதல் செய்வாம்.

### சரஸ்வதியம்மை

மலர்மகன் மனைவி யாகி மாதரிற் சிறந்து மேலாந்
தலமதில் யாரு முய்யத் தகுமுணர் வளிக்குங் கல்வி
நலமிக நல்கி யின்ப நால்வகைக் கவிகள் பாடும்
புலமையு மருளுந் தெய்வப் புனிதையைப் போற்றி வாழ்வாம்.

### மகா சாத்தா

மேருமா மலையி லன்று விண்முழு தாண்ட வேந்தன்
பாரியைக் காத்தே னென்றும் பாருளோர்க் கருளும் வண்ணம்
பூரணை புட் கலையினோடு பொருந்தியே யகத்தி யன்றன்
சீருலாம் பள்ளி மேவுந் தேவனைப் பணிதல் செய்வாம்.

### அகத்திய முனிவர்

எழுகட லுண்டு நல்ல விருந்தமிழ்க் குரவ னாகிப்
பழுதற விந்தந் தாழ்த்திப் பாதக வசுரர்ப் போக்கி
முழுதுல குய்யத் தென்பான் முந்தியே வந்து பெம்மா
னழகுறு மணங்கண் டார்ந்த வருந்தவ னடிமேற் கொள்வாம்.

### திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

தனமிகப் பெற்று ரானோர் தகுதியி லுதவா ராயி
னினமதி லீயக் காட்டு மியல்புறு மாசா னென்ன
மனமிகு பாண்டி யற்கு மறுவம ணீக்கிச் சைவக்
கனநல னுற்று வாழக் காட்டினோர்க் கன்பு செய்வாம்.

### திருநாவுக்கரசு நாயனார்

சைவமாஞ் சமய மன்றிச் சமயங்கள் சாவி போகுந்
தெய்வமாஞ் சிவனே யன்றிச் செத்துமே பிறப்ப ரென்று
மெவ்வமில் சிலைநா வாயா விடுநஞ் சமுத மாயுஞ்
செய்வதுங் காட்டி யாண்ட திருநாவுக் கரசே போற்றி.

## சுந்தரமூர்த்தி நாயனூர்

பாடலி னினிமைச் செம்மான் பாங்கனுய்க் கொண்டு நங்கை
யூடலைத் தீர்க்கத் தூது வோரிரு முறையுஞ் சென்று
நாடருங் கயிலை சார நல்லமா தங்க நல்கிக்
கூடவே கொண்ட வாரூர்க் குழகனைப் பணிதல் செய்வாம்.

## திருவாதவூரடிகள்

தென்னவர்க் கமைச்ச ஞகிச் செகத்தியல் யாவுந் தேர்ந்து
மன்னிய சித்த சுத்தி வந்துமேற் சிவன்பாற் பத்தி
முன்னியே குருந்தி னீழன் முதல்வன தருளைப் பெற்றுத்
தன்னிலை நன்னிலை யேயாய தலைவனைப் பணிதல் செய்வாம்

## வழி

நந்திதன் வழியே வந்து நாரதர் மாந்தா தாவுக்
கிந்தநல் லகத்தி யன்ற னிரும்பாழி மேன்மை யாவும்
முந்திய காந்தம் காளி காண்டமே பிரமாண் டத்தும்
நந்தலில் பிரம கைவர்த்தத்தும் நவின்றதைச் சூதன் சொன்ஞன்.

இந்தமா புராணந் தன்னை யினியதோர் வசன மாக்கித்
தந்திட வேண்டு மென்று தவமிகு தேவ கோட்டை
நந்தலில், பழ, முன் கொண்டோன் நாடெலாம் புகழுஞ் சோம
சுந்தரச் செல்வன் வேண்டத் தொகுத்தனன் அவாவிஞேடும்.

## ஆக்கியோன் பெயர்

திரமுறு வகத்தி யன்றன் சீர்பெறும் பாழி மேன்மை
அருமறை யன்பா லேத்து மணிகிளர் மறைசை வாழ்வோன்
பெருகிய ஞான மூர்த்திப் பெயர்பெறு மாபில் வந்தோன்
கருதியே விந்நூல் செய்தான் கணபதி நாமத்தோனே.

## வாழ்த்து

வேதமோ டாகமங்கள் வேள்விமா பூசை வாழி
நீதியர் மன்னன் வாழி நிறைமழை மேகம் வாழி
மாதிடங் கொண்டோன் கோயில் வளமற மின்ப மெங்கும்
பூதிகண் டிகையும் வாழி புண்ணிய வடியார் வாழி.

## அவையடக்கம்

களமர்க ளமைத்த நெல்லுங் கடவுள ராதி யாய
விளமதி முடியா னுக்கு மேற்குமா போல வென்று
மளியின முழங்குஞ் சோலை யகத்தியான் பள்ளி மேன்மை
யெளியவன் சொன்னா னென்று வெள்ளாது கொள்வர் யாரும்.

பொன்னணி கண்ட மேலோர் பொருளுன்னிக் கொள்வ ரன்றி
யென்னணி செய்தா ரென்று யெள்ளார்க ளென்றே நூல்செய்
யென்னிலை சிறிதே யேனு மின்றமிழ் முனிவன் பள்ளி
முன்னிய பனுவ லாய முறையினான் மொழிய லுற்றேன்.

கடவுள் வாழ்த்து முற்றிற்று

உ

சிவமயம்

# திருவகத்தியான்பள்ளி மான்மியம்

## வரலாறுரைத்த வத்தியாயம்

ஸ்ரீமத் அகண்டாகார சச்சிதானந்த நித்திய சுத்த ஷாட்குண்ய சுயம்பிரகாச பரமபதியாகிய பரசிவம் தன்று திருவருளே சகலான்ம ரக்ஷார்த்தமாய்த் திருமேனிகொண்டும் சகல மங்களமு மோட்ச பதமுந் தமக்கே யுடைமைப் பொருளென்பதும், தம்பாலடைந்தார்கட்கு அருள்பவரென்பதும் உலகமுணர்ந்து தேறச் சிவனெனும் நாமம் தனக்கேயெனக் கொண்டும் சேதன சேதனங்களனைத்தும் எங்கு மெவையும் எரியுறு நீர்போலும் எள்ளின்கண் எண்ணெய்போலும் பரிபூரணமாயும் தனித்தும் கண்ணொளியில்லார் கதிரவற் கொள்ளார், கண்ணொளி யுள்ளார் கதிரவற் கொள்வார் என்பது போல அருள் சிறிதுமில்லார் அரன் இலையென்பார், அருள் பெரிதுடையார் அரனுளனென்பார். ஆதலின் அவரவர் தகுதிக்கேற்ப அது வதுவாய்த் தோன்றியும், சிருட்டி கிருத்தியஞ் செய்யும் வாணி நாயகனாகிய பிரமதேவரும் திருமகள் நாயகனாகிய திருமாலும் தேடியெய்த்தும் காணவொண்ணாததும், அன்பிற் சிறந்த வடியார்கட்கு விட்டு நீங்காப் பேரறிவாயுள்ளதும், சிவம் சத்தி நாதம் விந்து

என்னும் அருவமாகியும், சதாசிவ மென்னும் அருவுருவ மாகியும், மகேச்சுரன், உருத்திரன், திருமால், பிரமன் என்னும் உருவமாகியும், பிருதிவி முதல் ஆன்மா விறுகவுள்ள அட்டமூர்த்த வடிவமாகியும், தாயினும் இனியராய தலைவர் ஆன்மாக்கள் உய்யும்பொருட்டு உலகினியல்பும் தலைவனதியல்பும் ஆன்மாக்கள்தம்மியல்பும் அவ்வான்மாக்களைப் பந்தித்து நிற்கும் ஆணவமாதி மலம் தம்மையும் மறைத்துத் தம்முடன் ஒன்றுபட்டிருக்கும் ஆணவமாதி மலத்தினியல்பும், அதினின்றும் விடுபட்டுச் சத்தாகிய தம்மைக் கூடி இன்புறும் இயல்பும் உணர்ந்து கொள்ள பூருவத்தில் ஈசானம், தற்புருஷம், அகோரம், சத்தியோஜாதம், வாமதேவம் என்னும் ஐந்து முகங்களினின்றும் முறையே காமிகம், வாதுளம், மகுடம், ரௌரவம், கிரணம், காரணமாதி இருபத்தெட்டாகமங்களும் இருபத்தொரு சாகைகளையுடைய இருக்குவேதமும், நூறு சாகைகளையுடைய யசுர்வேதமும் ஆயிரம் சாகைகளையுடைய சாமவேதமும் ஒன்பது சாகைகளையுடைய அதர்வண வேதமும் ஆகிய வேதங்க ளனைத்தையும் அருளினர்.

மேற்கூறியவற்றை முறையே யுணர்ந்து அதுவே திண்ணமான நன்னெறியென்று தேறி அதன் வழியே யொழுகும் ஒழுக்கங்களிற் சிறந்தும் தமக்குரிய செயல் தவமே யென்பதும், விரும்பிய வெல்லாவற்றையும் உதவுவதும் தவமே யெனவும், புடம் ஏறவேறப் பொன்னொளி மிகுதல் போலத் தவத்தால் ஞானம் மிகும் என்பதும்

தவச் செல்வமே செல்வமெனக் கருதி அஞ்ஞானவிருளை நீக்கும் அருட்கதிர் வெண்ணிலா வெழுந்து உடல்போர்த் தாற்போல ஒள்ளிய விபூதியால் பொலிந்தொளிரும் திரு மேனியும், சிவஞானம் பெருகி விளங்குகின்ற உள்ளமும், மரவுரி யுடுக்கையும் முடிச்சடையும் கண்டிகையணியும் உடையராய்ப் பஞ்சாக்ஷரம் ஒலித்தொளிர் நாவும், பொறி புலன் கரணங்களை அடக்கி உயர்கின்ற வன்மையும், பொறைமுதற்குணமெலாம் நிறையுந் தன்மையும், பேரறி வும் கறையகற்றிய காட்சியும் கமலமலர் மீதமர்ந்த பிரமதேவர் உருப்பல வெய்தியது போன்ற இயல்பின ராகிய நாரதர், பருப்பதர், பப்புரு, தடி, சதவித்தையர், அசிதர், சரபங்கர், காசிபர், புதர், கௌதமர், கௌசிகர், பராசரர், சுகர், குச்சர், தேவலர், வசிட்டர், புலத்தியர், போதாயனர், பங்கு, அத்திரி, ததீசி, மார்க்கண்டேயர், பயிலர், உக்கிரசீலர், சுதீக்கிணர், சுசீலர், சுமதி, சத்தி, ஜாபாலி, ஆங்கிராவசு, யாக்கியவர்க்கியர், சாரதர், கிருபர், பிருகு, பரத்துவாசர், ஆபஸ்தம்பர், சதாதவர், மிருகண்டு, பரீசி, சிலாதர், ஊர்த்துவபாகு, மகாபாகு, தௌமியர், வாமதேவர், விசுவாமித்திரர், சுவேதகேது, தீர்க்கதபர், சாலிகோத்திரர், ஜமதக்கினி, காத்தியாயனர், உத்தாலகர், சுவேதர், சுமந்து, வைசம்பாயனர், சதா னந்தர் முதலிய முனிவர்களும் அவர் வழி ஒழுகும் மாணாக்கர் அலகிறந்தவர்களாகிய அனைவரும் தவம் சித்திக்கும் தலமாய்த் தங்களுக்குப் பிரமதேவர் அருளிய

தருப்பை நேமி வந்துதங்கிய நைமிசாரணியத்தின் கண்ணே சத்திரயாக மென்னும் மகாயாகத்தைச் செய்து பரம சந்தோஷ சித்தர்களாய் வீற்றிருந்தனர்.

அதுபோது லோகோபகாரமாய் அவதாரஞ் செய்த ஒள்ளிய தவமே ஒரு வடிவெடுத்து வந்தாற்போலும் விளங்குகின்றவரும், வெள்ளிய விபூதியால் உத்தூளனஞ் செய்து சிரம், கரம், கண்ட மாதிய வெங்கும் அணிந்து விளங்கும் கண்டிகையணியும், சிவனலாற் றெய்வம் இல்லை யென்னும் திண்ணிய வெண்ணமும், கண்டோர் மனமெலாம் பெருமகிழ்ச்சியடையச் செய்யும் பொலிவு தங்கிய வடிவினராய்ச் சூதமுனிவர் வரக்கண்ட அம் முனிவர்கள் அவரைக் கண்ட மாத்திரத்தில் களிப் படைந்து கசிந்துருகிய உள்ளத்தினராய் ஒருங்கே யாவரு மெழுந்து எதிர்சென்று நல்வரவேற்றுத் துதித்து அழைத்து மத்தியில் உயர்வாகிய ஆசனமிட்டு அதில் எழுந்தருளச் செய்து பாத்தியமாதி பூசோபகரணங்களைக் கொண்டு அன்புடன் பூசித்துப் புகழ்ந்து கொண்டாடிச் சூதமுனிவரை நோக்கி, "முனிபுங்கவரே! தேவரீர் வரப் பெற்றது எங்கள் பெருந்தவப் பயனே" என்று துதித்து வேண்டுவாராயினர்.

"அருந்தவஞ் செய்து பெறும் பெரும் பேறியாவும், தேவரீர் அமுதவாய் மொழியால் உதவியிடும் பெரியோய்! சிவபெருமான் உமாதேவியாரோடும் எழுந்தருளி ஆன்மாக் கள் உய்யும்பொருட்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கும்

அநேக க்ஷேத்திர வைபவங்களைத் தேவரீர் சொல்லக் கேட்டு, ஆனந்தித்தோம், ஆயினும், இன்னும் எங்கள் சித்தம் தெளிவடையும் பொருட்டுத் தலம், தீர்த்தம், மூர்த்தி ஆகிய விசேடங்கள் அமைந்த தவசித்தி க்ஷேத்திரமாயுள்ள ஒன்றை உரைத்தருள வேண்டும்'' என்று வேண்டிக் கொள்ளச் சூதமுனிவர் சொல்லுவார்.

மகரிஷிகளே! உலகவியல்பும், வேதசிவாகம மாதிய வியல்புயாவும் உணர்ந்த நீங்கள் விரும்பியவண்ணம் சித்த சுத்தியைத் தந்து சிவபெருமான் திருவருளை அருளுவதும், மூன்று லோகங்களிலும் புகழ்ந்து கொண்டாடப் படுவதும் ஆகிய இறைவன் அருளிய வேதாகமம், ஏனைய நூல்களுக் கெல்லாம் முதன்மை பெற்று அமுதசாரமாய் அருள் நிறைவுடையதாய் எவ்வாறு விளங்குகின்றதோ அதே தன்மையாய் விளங்குகின்றதுமாகிய அகத்தியான் பள்ளி யென்னும் தலமே எவற்றிலும் மேன்மை வாய்ந்து விளங்கும். அதில் தேவர், முனிவர் முதலாகிய எண்ணிலார் தவஞ்செய்து அருள்பெற்றனர். அன்றியும் அது தலம், தீர்த்தம், மூர்த்தியென்னும் மூன்றினாலும் சிறந் துள்ளது. அதன் மேன்மையைச் சதுர்வேதங்களை யுணர்ந்த பிரமாவினாலும், இரண்டாயிரம் நாவுடைய அறிவிற்சிறந்த ஆதிசேடனாலும் அளவிட்டுச் சொல்ல முடியாததாகும். அத்தகைய தலத்தின் வைபவங்களை யான் யாது புகல்வேன்! யான் புகலும் தகுதியுடை யேனோ! ஆயினும் அதனை எண்ணுதற்கு என்மனம்

முந்துகின்றது. என்நாவும் துதித்தற்கு விரைகின்றது. இது வும் எம்பெருமான் திருவருளே என்று அதன் பெரு மையை நினைத்து மனம் நெக்கு நெக்குருகிச் சரீரம் புளகாங்கிதங் கொண்டு கண்களினின்றும் ஆனந்த பாஷ்பம் சொரிய உவாக்கடலினுவகை யோங்கப் பரவசராய் "யான் இது சொல்லும் பெரும்பேறு பெற்றேன், பெரும்பேறு பெற்றேன்" என்று கேட்போர் செவியில் அமுதம் வார்த் தாற் போலச் சொல்லுவாராயினர். "அகத்தியான்பள்ளி யை ஒருமுறை யன்போடு யாவராயினும் நினைக்கின் அவருடைய சஞ்சிதமாதி தீயவினைகள் யாவும் ஒழியும். இது பெருந்தவமுடையாரே கேட்கற்பாலார். இதுகாறும் அதன் பெருமையை எவர்கட்கும் அறைந்திலேன். நீங்கள் தவத்தாற் சிறந்தவர்களாதலால் இப் பொழுது அதனை உரைக்கின்றேன். அன்றியும் தவசித்தித் தலமாகிய அகத்தியான்பள்ளி மான்மியத்தை அன்புடன் பூசித்துப் படிப்பவரும், அதனைக் கேட்போரும், கேட்டு மகிழ்வோரும், படிக்கச் செய்தவரும் என்றுங் குறைவு படாத நிறைந்த செல்வமும், ஆயுள்விருத்தியும் பெறு வர்; எக்காலத்தும் பிணியுறார்; வெற்றியே பெறுவர்; இல்லறத்திற் குரிய நன்மனைவியைப் பெற்று அறிவிற் சிறந்த நல்லபுதல்வரையும் பெறுவார்; நிலைபெற்ற நல்ல கீர்த்தியையும், எக்காலத்தும்மனமகிழ்ச்சியையும் பெற்று அபீஷ்ட சித்தியையும் பெறுவார். மேலும் எல்லாப் பதங் களினும் மேலான மோட்சத்தில் இன்பத்தையும் பெற்று வாழ்வார்" என்று சூதமுனிவர் சொல்லியருளினர்.

# அகத்திய முனிவர் பூசித்த அத்தியாயம்.

சிவத்தியான பரர்களாய்ச் சிரவணானந்த உத்தமர்க ளாய் விளங்கும் நைமிசாரனிய வாசிகளாகிய முனிவர்கள் யாவரும் சிவமெனும் பயிர் உள்ளமெனும் வயல்களில் செழுமையாக வளர்ந்தோங்கச் சிவசரிதமென்னும் இனிய மழையைப் பொழியும் மேகமாகிய சூதமுனி வரை நோக்கித் தேவரீர் இப்பொழுதுரைத்த அகத்தியான் பள்ளியென்னும் அரும்பதியாகிய புண்ணிய தலத்தின் பெருமையை யாங்கள் உய்யும்பொருட்டுத் திருவாய்மலர் தருளவேண்டுமென்று பிரார்த்திக்க, சூதமுனிவர் மகிழ்ந்து அருள்பவராய்ச் சிவத்தியானஞ் செய்து அகமகிழ்ச்சி யெழ முன்னினுஞ் சிறந்த முகப்பொலிவுடையராய் மனங் கசிந்துருகி முனிபுங்கவர்களை நோக்கிப் பெருந்தவத்தீர்! அகத்தியான் பள்ளியை நினைக்கினும், காண்கினும், அதன் பெருமையைக்கேட்கினும், சேர்ந்துவைகினும், அதிலுள்ள தீர்த்தங்களிலாடினும், மூர்த்தியைத் தரிசிக்கினும் சஞ்சி தமாதிவினைகளை யொழித்து வேண்டும் பெரும் பேறும் அருள்வதுமாகிய அப்பதியின் பெருமையை ஏதோ இயன்ற வாறு உரைக்கின்றேன். அகத்தியான்பள்ளி அகத்திய முனிவர் தவஞ்செய்து அகத்தீசப்பெருமானைப் பூசித்து இருக்குமிடமாம். முனிவர்களே! இனி அகத்தியமுனிவர் வந்த வரலாற்றைச் சிறிது உரைப்பாம். பூருவத்தில் கைலாய பருவதத்தின்கண்ணே, பொன் மயமான அழ

கிய சித்திரப்பந்திகள் அமைந்ததும், மதில்களாற் சூழப் பெற்றதும், உன்னதமான கோபுரங்கள் விளங்கப் பெற்ற துமாகிய திவ்வியாலயத்தில் விளங்கும் மகாமண்டபத்தின் கண்ணே, சிம்மாசனத்தின் மீது சகல லோக நாயகராகிய சிவபெருமான் உமாதேவியாரோடும் எழுந்தருளி யிருக்கும்போது ஒருநாள் தேவியார் எழுந்து தலைவராகிய பெருமானது அன்றலர்ந்த செந்தாமரைமலர் போலும் விளங்குகின்ற திருவடியிற்றாழ்ந்து வணக்கத்தோடும் எழுந்து நின்று அழகிய வளைகள் ஒலிக்கின்ற கைகளைக் கூப்பி அன்போடும் குமுதவாய் திறந்து இனையவற்றைக் கூறலுற்றார். சற்சனர்களை ரக்ஷிக்கும் பொருட்டு மகா மேருவைத் திருக்கரத்தால் வில்லாக வளைத்தருளிய என் பிராண நாதா! தேவரீருடைய பெருமையை எண்ணாத தக்கனது குமாரியாய்த் தாக்ஷாயணி யென்னும் பெயரை யான் பெற்றிருக்க என்மனம் சகியாதிருப்பதால் அப் பெயரகல அருள்பாலிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, வள்ளலாகியகடவுள் உமையை நோக்கி, "இமயமலையரசன் தனக்குப்புதல்வியாக நின்னைப் பெறப் பெருந்தவஞ் செய் கின்றான். ஆதலால் நீ சென்று அவன்பால்புதல்வியாகி வளர்ந்திருக்கக் கடவாய். யாம் பின்னர் அங்குவந்து உன்னை மணஞ்செய்து கொள்கின்றோம்" என்றருள்பாலிக்கப்பெரு மாட்டியார், தலைவரிடத்து விடை பெற்றுக் கொண்டு சென்று இமயமலையிலுள்ள ஓர் அழகிய வாவியிற்பொலிந்து விளங்குகின்ற தாமரைமலரின்மீதுசராசரங்கள் அனைத்தை யும் ஈன்றவராகிய அவ் வுமாதேவியார்செளந்தரியத்தோடு

விளங்குகின்ற இளங்குழவி வடிவாகி வீற்றிருந்தார். அப்பொழுது தான் இயற்றிய பெருந்தவம் பலித்ததெனமலையரையன் அவ்வருமைக் குழவியைக் கண்டு களித்துத் தான் அடையப் பெறாத பெருஞ் செல்வம் அடைந்தாலெனப் பெருமகிழ்ச்சியோடும் அதனைக் கையிற்றாங்கித்தனதரண்மனைக்குச் சென்று தன் தருமபத்தினியாகிய மேனையிடங் கொடுத்தான். மலையரையன் மனைவியாகிய மேனை என்பாள் குழந்தையைத் தொழுது வாங்கிப் பேரானந்தங் கொண்டு, தலைவனே இக் குழந்தை வந்த வரலாறு யாதெனஅரசன் நிகழ்ந்தவை யாவுமுரைத்தான். அதுகேட்டு எம் பெருமான் திருவருளோவென நிறைந்த அன்போடும் தவப்புதல்வியைச் செய்ய முகத்திலணைத்து உச்சி மோந்து உள்ளம் பெருமகிழ்ச்சியுடையவளாய்க் கொங்கைகளினின்றும் பால் சுரந்தொழுகச் சரீரம் புளகாங்கிதங் கொண்டு கவலையாவும் நீங்கினவளாய் எல்லாவுலகமுஞ் செய்த பெருந்தவத்தினும் பெருந்தவம் வளர்வதெனக் குழந்தைப் பருவத்திற்குரிய தண்டை முதலிய ஆபரணங்களனைத்தும் அணிவித்துக் காப்பிடுதல் முதலிய சடங்குகளெல்லாம் வெகு விமரிசையுடன் செய்து வளர்த்தார்கள்.

இப்படிக் குழந்தைக்கு ஐந்து ஆண்டுகளுஞ் செல்லச் சிற்சத்தியாகிய குழந்தை தன்னைச் சிவபெருமான் திருமணஞ் செய்துகொள்ள வரவேணுமென்று வேணவாவுடையளாய்த் தவஞ்செய்யக் கருதிப் பிதாவாகிய மலையரசனிடத்தில் உரைத்தனள். அது கேட்ட அரசன் தாயே!

இளமை வாய்ந்த உனது திருமேனி தவஞ் செய்யப்பொரு தென்றுரைக்கக் குழந்தையாகிய பார்வதி அரசனை நோக்கிப் பிதாவே! கொன்றைப் பூமாலையைச் சடையிற் றரித்த தலைவர் காப்பார். ஆதலால் மறுத்துரையேல் என்றாள். இமவான் அதுகேட்ட மாத்திரத்தில் அதிசயித்து அன்போடும் அம் மலையிற்றானே தவச்சாலை ஒன்று இயற்றினன். அத் தவச்சாலையினிடத்துப் பார்வதி தேவியார் மேக மண்டலத்தை யளாவுகின்ற சோலைகள் சூழ்ந்த கைலையங்கிரி வாசகராகிய சிவபெருமானைச் சேர அரிய தவமியற்றினர். சனகர் முதலிய நான்கு முனிவர்கட்கும் சிவாகமப் பொருளாகிய பதி பசு பாச விலக்கணங்களைத் திருவாய் மலர்ந்தருளி மீளவும் அவர்கள் மனம் அடங்க அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கிச் சின்முத்திரையால் ஞான போதமும் அருளிய கடவுள் உமாதேவியார் அருந்தவத்தின் தன்மையைக் கண்டு மலையரையன் மணவினை யிசைவையும் சப்த விருடிகளால்கேட்டுக் கொண்டனர், அது நிகழ்ந்ததும், நந்தி தேவரை எம்பெருமான் நோக்கி நம் திருமணத்திற்காகப் பிரமன், திருமால் முதலிய தேவர்கள் உருத்திராதியோர்கள், முனிவர்கள் முதலிய யாவரையும் அழைக்கக் கடவா யென்றருள் புரிய, அவ்வண்ணமே நந்தி தேவரழைக்க, யாவரும்வந்து சேர்ந்தனர். எம்பெருமான் கைலையி னின்றும் திருக்கல்யாண கோலராய் நந்தி தேவர் முதலிய அனைவரும் சூழ எழுந்து சகலோபசார வைபவ முழக்கங்களோடும் இமய மலைக்கண் வந்து சேர்ந்தார். அப்பொழுது யாவரும் திருக்

கல்யாணத்தின் பொருட்டு ஒரு பாலுற்றதால் பூமியானது தாங்காது தென்திசை உயர்ந்தது; வடதிசை தாழ்ந்தது. இவ்வண்ணம் பூமி சலனமுற்ற மாத்திரத்தில் அரி பிரமேந்திராதியோர் அனைவரும் அச்சமுற்றுப் பெருமானிடம் வந்து வேண்டத் தலைவராகிய சிவபெருமான் புன்னகையுடையராய் நந்திதேவரை நோக்கிக் கடலேழையும் கரதலத்திலமைத்துண்ட அகத்தியனை இவண் அழைப்பாயாகவென்றருள, நந்தி தேவர் அகத்திய முனிவரைத் திருமுன்னர் அழைத்துக்கொண்டு வர, அகத்தியமுனிவர் அன்போடும் அச்சத்தோடும் எம்பெருமானின் றிருவடிகளில் இறைஞ்சித் தலைவரே! அடியேனுக்கிடும் பணி யாதோவென்று வேண்டி நின்றார். திருமணக் கோலத்தையுடைய தலைவர் அகத்திய முனிவரை நோக்கி அகத்தியனே! நமது திருக்கல்யாணத்தின் பொருட்டு யாவரும் ஒருங்கே இங்குச் சேர்ந்தமையால் பூமி தாங்காது சலித்தது. அதனால் யாவரும்மனம் நடுங்கித்துன்புற்றனர். ஆகையால் இதுதீர இவண்விட்டு நீங்கித் தென்னாடுற்று உலகம் சமனிலையடைந்து இனி துறச் செய்யக்கடவாய் என்றருளினார். இவ்வண்ணந் திருவாய் மலர்ந்தருளியதைக் கேட்ட மாத்திரத்தில் அகத்தியமுனிவர் மனந்திகைத்து, இறைவன் பணித்த பணியைச் சிரமேற்கொண்டு வணங்கி யெம்பெருமானே கருணையங்கடலே! திருமாலுள்ளிட்ட தேவரும், முனிவரும், மற்றுயாவரும் ஈண்டுற்றுத் தேவரீருடைய திருக்கல்யாண தரிசனஞ்செய்யவும், யான் ஒருவனுமே இந்தத்திக்கிலும் இருக்கவொண்ணாத் தீவினையைச் செய்த

வனே யென்று மிக வருந்தி வேண்ட, தேவாதி தேவனு கிய சிவபெருமான் கருணைகூர்ந்து அகத்தியனை கரியமணி யினும் கறுத்து நெய்த்த கூந்தலையுடைய உமையோடு நாம் எழுந்தருளியிருக்கும் மணக்கோலம் நீ காண, அழகிய சோலைகள் சூழப்பெற்றதும், உத்தமோத்தமத் தலமுமா கிய திருமறைக்காட்டில் நாம் உனக்கருளுவோம். அன்றி யும் நீ செல்லும் மார்க்கத்தில் உலகினுக் கிடர்செய்து கொண்டிருக்கும் விந்தத்தை யடக்கி வாதாபி வில்வலனை யும் அழித்து மேன்மையையுடைய மறைவனத்தை யடைந்துமறைக்காட்டிற்குத் தெற்கேயும்சேதுக்கோடிக்கு வடபாலும்இதனிடையில் விளங்கும் தலத்தின்கண்வைகிப் பஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக் கொண்டு இனிதிருப்பாயாக என்றருள் புரிந்தார். அகத்திய முனிவரும் சிவபெருமா னிடத்தில் விடை பெற்றுக்கொண்டு திருமால் பிரமன் முதலிய தேவர்களும் மற்றும் யாவர்களுங் கொண்ட துயர் நீங்க ஆலகால விடத்தைப் பானம் பண்ணிய சிவபெருமா னது திருவருட்டுணையையுடையராய்த் தென்றிசை நோக் கிச் செல்வாராயினர்.

அகத்திய முனிவர் வழிக்கொண்டு வரும் மார்க்கத் தின் மத்தியில் உயர்ந்து வழிமறைத்து நிற்கும் விந்திய மலையெதிர்ப்பட, அம் மலையை நோக்கி முனிபுங்கவர் நான் தெற்கே செல்வதற்கு வழி விடுவாயாக என்றுரைத்தனர். அதுகேட்ட அசுரத்தன்மை வாய்ந்த அவ் விந்தம் முனி வரை நோக்கி, முனிவரே எனக்கும் மேருவிற்கும் நேர்ந்த

விரோதத்தினால் யான் உயர்ந்து நிற்கின்றேன். ஆதலால் இப்பொழுது நீர்செல்ல வழிவிடேன் என்றுரைத்தது. அது கேட்ட தவசிரேஷ்டராகிய முனிவர்பெருமான், யாவரும் திடுக்கிட்டு நடுங்கும்படி மிகுந்த கோபங் கொண்டு அட்டமாசித்திகளி லொன்றாகிய மகிமா வென்னும் சித்தியால் பெரிய வடிவுடையராய் மேலோங்கி நின்று தனது அகங்கையை அம் மலையின் சென்னியில் வைத்து அதனைப் பாதாளமுற வழுத்தினார். இது நிகழ்ந்ததும் தேவர்கள் முதலிய யாவரும் அதனால் களிப்புற்றனர். திருமால் முதலிய தேவர்களுக்கும் ஏனையோர்க்கும் இடையூறியற்றிக்கொண்டிருந்த ஒரு கொடிய மலையை ஒரு குறுமுனிவர் அடக்கினாரென்றால் அம் முனிவரது தவத்தினையோ சிவபெருமான் அம் முனிவரிடம் வைத்த அருளினையோ புகழ்வது! இஃது இங்ஙனமாக முனிபுங்கவர் மீண்டும் தென்றிசை நோக்கிச் செல்வாராயினார்.

அப்படிச் செல்லுங்கால் வஞ்சகத் தன்மை வாய்ந்து கொடிய தொழில்களையே செய்துகொண்டிருந்த வாதாபி, வில்வலன் என்ற இரண்டு அதிபாதகர்களையும் தொலைத்து வழிச் சென்று தென்னாடடைந்தார். இப்பூதலமும் முன் போலச் சமனிலையுற்றது. இவ்வண்ணம் உலகத்திற்கு நேர்ந்த துன்பங்கள் அனைத்தையும் அகற்றிப் பெருமை வாய்ந்த தமிழ்முனிவர் சிவபெருமான் அருளியவாறே திருமறைக்காட்டை யடைந்து அங்குள்ள வைபவங்கள்

எல்லாவற்றையும் கண்டு களித்தனர். அங்கு மகத்துவம் பொருந்தியனவும், மனவாக்குக்களால் நினைக்கவும்புகழவும் ஒண்ணாத பெருமை வாய்ந்தனவுமாகிய வேதநதி, மணிகர்ணிகை, வேதாமிர்தம் முதலிய புண்ணிய தீர்த்தங்களில்ஆடிப்பரிசுத்த கர்த்தராகியசிவபெருமான் "வேண்டுவார் வேண்டுவதே ஈவான்" என்னும் வாச்சியத்திற்கு இலட்சிய மூர்த்தியாய் எழுந்தருளி யிருக்கும் ஆலயத்தினுள்ளே சென்று அன்பு மீதூர உள்ளங் கனிந்து அங்கு இனிது விளங்கும் கருணைவள்ளலைத் தரிசித்து ஆனந்த மேலீட்டால் கண்துளி பரப்பி வணங்கிப் பரவசராய்த் தோத்திரஞ் செய்து பெருமகிழ்ச்சி யுடையரானார்.

அதன் பின்னர் அங்கு நின்றும் அகத்திய முனிவர் எம்பெருமான் திருவருளையே நினைந்து வியந்து ஆலயத்திற்குத் தெற்கே * ஒருகுரோசதூரஞ் செல்லுமிடத்து அதிஉன்னதமான பலவளங்களோடுங் கூடிப் பார்ப்பவருள்ளத்தைக்கவரும் தன்மையுடையதாய் மிக்க அழகு வாய்ந்த ஒப்பற்ற சோலையொன்று எதிர்தோன்றக் கண்டனர். செந்தமிழ்க் கிறைவராகிய முனிவர் இது வென்ன ஆச்சரியம் எம்பெருமான் திருவருட் பொலிவை யுடையதாய் இதோ ஒரு சோலை தோன்றுகின்றதே. இதனைச்சமீபித்துஆராய்ந்தறிவோம்என்றெண்ணிஆண்டுச் சென்றனர். சென்றதும், இதுகாறும் அறியாத ஓரினிய மணம் கமழக்கண்டார். அதனால், முனிவர் பெருந்தகை அகம்நெகிழ்ந்து பெருமகிழ்ச்சியுடையராய் அதிசயித்துக்

---

* கூப்பிடு தூரம்.

கமழ்கின்றஇந்தமணம்போல்என்றும் அறிந்திலேம். இஃது எம்பெருமான் திருவருளால்விளங்குகின்றது. அச்சோலையில், ஆகாயத்தை அளாவிய தெங்கு, ஆமிரம், தேஞ்சுளைப் பனசம், மங்குலளாவியகதலி, பலையசம், நாகம், நாரம், நாவல், சதாபலம், கமுகு, பூழில், பொன்னவிர்கொன்றை, செயலை, பாதிரி, சண்பகம், வதரி, வகுளம், கோங்கு, முடங்கல், செருந்தி, கபித்தம், சீர்பெறுநெல்லி, வேங்கை, வில்லம் இவை முதலாய இன்னும் பலதருக்களும், மல்லிகை, முல்லை, இருவாட்சி, கரவீரம், செவ்வரத்தம், நந்தியாவர்த்தம் முதலியனவும் விளங்கக் கண்டும், சுற்றிலும் இலங்கும் வாவிகளில் தாமரை முதலியனவும் விளங்குந் தோற்றமுங்கண்டு வியப்புற்றார். அவற்றுள் தளிராயுதவுவன பல, இலையாயுதவுவனபற்பல, அரும்பு, மலர், பிஞ்சு, அருங்காய், கனி என்றவற்றை ஒவ்வொன்றும் உதவும் பயனுடனே சிறந்து நிற்கும் அழகைப் பார்த்து நாம் எத்தனையோ வனங்களையும் தவாரணியங்களையும் பார்த்திருக்கின்றோம். இங்குத்தோற்றும்விருட்சாதிகள் முதலியனவெல்லாம் அதிசயிக்கத்தக்க திருவருட் பொலிவையுடையனவாய் விளங்குகின்றன. ஆதலால் இச் சோலையினின்றும் வீசியதோ இந்த மணம். ஆனால் இது மனநெகிழ்ச்சியுடன் சாந்தத்தையும் விளைவிக்கின்றது. ஆதலால் இஃது ஒருதெய்வீக மணமாகவே இருக்கவேண்டும் என்று சிந்தித்தனர். திருமகள் வசிக்கின்ற செந்தாமரை மலரினின்றும் வீசிய மணமோ நாமகள்

வசிக்கின்ற வெண்டாமரை மலரின் மணமோ, சத்தியலோக வாசராகிய பிரமதேவர் வீற்றிருக்கின்ற அரவிந்தமலரின் மணமோ என்று அவர் ஆராய்வாரானார். இஃது ஈடும் எடுப்பும் இன்றி இனிமையும், பெருமகிழ்ச்சியும், பெருமிதமும், சாந்தமும் அன்பும், வியப்பும் உண்டு பண்ணுகின்றது. அன்றியும் விட்டு நீங்காமல் மேலும் மேலும் அதிகரிக்கும் தன்மையுடையதாய்க் கமழ்கின்றது. ஆதலால் இதனை என்னென்று தேறுவேன் என்றுஐயுறுவாரானார் இவ்வாறுஐயுற்ற முனிவர்பெருமான் ஒருவாறு தெளிவார். அஃதென்னெனில்: சிவமணமென்று பெரியோர்கள் கூறியிருக்கின்றார்களே அதுவாக விருக்கலாம் ஆயின் அச் சிவமணம் தலைவராகிய சிவபெருமான் திருப்பூங் கோயிலாய்க் கொண்டெழுந்தருளி யிருக்கும் தொண்டர் அகத்தாமரைமலருக் கல்லவா கூறியிருக்கின்றார்கள். அஃது இப்பொழுது இந்தத் தலத்தை வந்து அடைந்த அடியேனுடைய அகத்தாமரைமலரை எம்பெருமான் எழுந்தருளியிருக்கத்தக்க திருப்பூங்கோயிலாக மலரச் செய்ததோ. அடியேன் இந்தத் தலத்தை நோக்கி வரும்போதே சில நன்னிமித்தங்களும் தோன்றின. ஆதலால் அதன்பயனே இதுவாகும். இந்தத்தலம்உத்தமத் தலமேயாக வேண்டுமென்று தெளிவடைந்தவயராய் நின்றார்.

அன்றியும் அங்குள்ள வாவிகளில் ஒருதுறையில் யானும் புலியும்நீர்பருகின. மற்றும்பகைமையுடையபசுவும்

புலியும் ஓர் துறையில் பகையின்றி நீர் பருகிச் சல்லாபமாய்த் திரிதலாலும் இந்த இடத்தில் ஏதோ வோர் விசேடமிருக்கவேண்டுமென்றுங் கருதினார். அதுவு மன்றி மான் கன்றுகளும் பசுவின் கன்றுகளும் யாருங் கண்டு களிகூரத் துள்ளிவிளையாடிக் கொண்டிருப்பதையும், பசுக்களைப் போலும் பருத்து அழகிய புள்ளிகள் விளங்கும் கலைமானும் பிணையுமாய்க்கூடிக் கூட்டங் கூட்டமாய் உலாவிக் கொண்டிருப்பதையும் பார்த்து முனிவர்பெருமான் இந்த இடத்தில் மானினங்கள் அதிகமாய்த் தங்கியிருப்பதால் இந்தத்தலம் அருந்தவச் செல்வர்களாகிய மகான்கள் தங்கியிருக்க வேண்டுமென்று கருதினார். இத்தகைய விசேடங்கள் நிறைந்த இந்தத் தலமே நாம் தவஞ் செய்திருக்கவும் தவசித்தியைப் பெற்றுய்யவும் எம் பெருமான் திருவருள் பாலிக்கத் தக்கதே யாகுமென்று எண்ணினார்.

இவ்வண்ணம் ஆலோசித்து அகத்திய முனிவர் அத் தலத்தில் சமாதிபராய் வீற்றிருந்து அருந்தவமியற்றத் தவச்சாலையொன்றைக் கண்டனர். அத் தவச்சாலைக்கு அதி சமீபத்தில் ஆன்மார்த்த மூர்த்தியாகிய சிவபெருமானைப் பூசிக்கும்பொருட்டுப்புண்ணியவடிவமாய்த் தடாகம் ஒன்றையும் அமைத்துக் கொண்டனர். இன்னமும் தலைவராகிய சிவ பெருமான் எழுந்தருளியிருக்க ஆலயம் ஒன்றை நிருமிக்கத் தொடங்கினார். அப்பொழுது தேவலோகத்திற் கிறைவனாகிய இந்திரன் அகத்திய முனிவர் நம்பால் மனமிரங்கி

நமது வேண்டுகோளுக்காய்க் கடலேழையுமுண்டு நாம்,சத் துருவைவெற்றி கொள்ளும்படிக்குப்பூருவத்தில்உதவிபுரிந் தனர். அவ்வகத்திய முனிவரோ சகலசத்தியும்வாய்ந்தவர். நம்பால் ஒன்றையும்வேண்டுபவரல்லர். ஆயினும் அப்பெரி யாருக்கு எவ்வாறு கைம்மாறு இயற்றுவோமென நினைந்தி ருந்து இதுவோர் நல்ல சமயம் வாய்த்தது என்றெண்ணி அவ்வாலயத்தை நாமே யியற்றுவோ மெனக் கருதி, அவ் விந்திரன் தேவலோகத்தி லிருந்துகொண்டு வந்து அமைத்து வைத்தாற்போலும் திவ்ய ஆலயமொன்றை அமைத்தனர்.

அவ்வலாயத்தின்விமானமானது எல்லொளியும் மழுங்கும்படி இருளைக்கடிந்து பலகிரணங்களை வீசிப் பர்வ தாகாரமாய் அன்பர்களது அகவிருள் கடிந்து ஞானபாநு மேலெழுந்து விளங்கினதுபோலக் காட்சிக் கினியதாகிச் சூரிய மண்டலம், சந்திரமண்டலம், நக்ஷத்திரமண்டலங் களானவை பலவடி வெடுத்து வந்து விளங்கினாற் போல அழகிய சித்திரபந்திகளமைந்த அந்தராலயம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், தரிசனமண்டபம் சிவாகம படன மண்டபம், வேதாத்தியயன மண்டபம், அலங்கார மண்டபம்புராணமண்டபம், யாகமண்டபம், சித்திரமண்ட பம் திருப்பள்ளியறை மண்டபம், வாத்திய மண்டபம், நிருத்தமண்டபம், வசந்தமண்டபம் முதலாகிய மண்டபங் களும்விளங்கின. சப்தசாகரங்களையும் சூழ்ந்திருக்கும்எழு மலைகளும் அகத்திய முனிவரியற்றும் ஆலயத்தின் மதில்

களாக நாம் சென்று அமைந்திருக்கவேண்டுமென்று வந்து தங்கியதையொத்து எழுமதில்களும் விளங்கப்பெற்றன. சத்த தீவுகளும் வந்து அழகோடு அமைந்து விளங்கினாற்போலும் பிராகாரங்களும் வீதிகளும் இலங்கப் பெற்றன. ‡உரோமாக்கிரங்கள் தோறும் அண்டங்களெல்லாந் தோன்றும்படி சிவபெருமான் அகண்டாகார வடிவங்கொண்டு நின்றாற்போல, அதி உன்னதமாய்ப் பொன்னொளி வீசுகின்ற திருக்கோபுரங்களும் யாவருங் கண்டிறைஞ்சி வழிபடக் காணப் பெற்றன. இவ்வண்ணம் தவசிரேஷ்டராகிய முனிவர்பெருமான் தனதாச்சிரமத்தில் அமைத்து விளங்கும் ஆலயத்தைக் கண்டு களிப்புற்றனர்.

அதன் பின்னர்ச் சரீரம் பெற்றவர்கள் அவசியம் இயற்றவேண்டிய சிவ கைங்கரியங்களினுஞ் சிறந்து அரியதவத்தினும் அரியதாய்ப் பதி புண்ணியத்தின் மேம்பட்டதாய்ச் சகலசித்திகளும் வேண்டியவாறே அருளுஞ் சிவபூசையின் விருப்பினராய் ஆலயத்தில் தாம் பூசிப்பதற்கு மனம் வாக்குக் காயங்களினாலே கோசரிக்கப்படாத அகண்டாகாரமாயுள்ள சிவபெருமானைச்*சிகதத்தினால் இலிங்கம் அமைத்துப் பிரதிஷ்டை செய்து பூசோபகரணங்களாயுள்ள யாவுங்கொண்டு மூன்று விக்கினங்களுமின்றிப் பஞ்சசுத்திகளும் இயற்றி விதிப்பிரகாரம் சிவோகம்பாவனையுடையராய் அந்தர்யாகமுமியற்றி மூர்த்திக்கு மந்திரபூர்வமாய்த் தேகம் முதலியன கற்பித்துத் தியானித்து ஆவாகனாதிகளுமியற்றிச் சகல திரவியங்களையுங் கொண்டு அபி

---

* மணல்

‡ உரோமத்தினுனி

ஷேகாதி யலங்காரங்களும் வெகு விமரிசையாய்ச் செய்து பூசித்து, ஆவரணங்களேயும் பூசித்து, அளவிலவாய்ச்சுவை நிறைந்த அன்னுதிகளும் நைவேத்தியஞ் செய்து தூப தீபாதி உபசாரங்களுடன் அர்ச்சித்துக் கெண்டைமீன் போலுங் கண்களேயுடைய உமாதேவியாரையும் விதிப்படி பூசித்துச் சுயஞ் சோதியாய் விளங்கும் சந்திர சடாதாரியா கிய சிவபெருமானே அன்புடன் துதிப்பாராயினர்.

மங்கையைப் பாகம் வைத்து மதிகொன்றை முடிமேற் சூடிக்
கங்கையைச் சடைமேற் ருங்கிக் கண்களோர் மூன்றுந் தோன்றச்
செங்கதி ரனந்த கோடி திகழ்ந்தெனவிடைமேற் ருேன்றி
இங்கெனே யாள வந்த வெம்பெரு மானே போற்றி.

அலேகடல் சூழும் நல்ல வவனியின் மறைக ளேத்துந்
தலேமிசை மணக் கோலத்தைத் தருவதுமென்ருே வென்ருே
புலவர்களேனேர் போற்றப் பொருப்பினி லுற்ற வாறே
நிலேபெற வருள வேண்டும் நிருத்தனே யடியேற் கெந்தாய்.

என்றும் இன்னும் பல துதிகளாலும் துதித்து அகத்திய சப்பெருமான் சன்னிதியிலமர்ந்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உச்சரித்துக்கொண்டு எப்பெருமான் திருமணக்கோலம் யான் காண என்றுதான் அருளுவாரோ என்று அருந் தவத்திலமர்ந்து பருவ மாமுகிலேக் காணுத சாதகப புட்போல் மனங்கனிந்து ஒரு சிறு பொழுதைப் பல யுகங் களாகக் கழித்தனர்.

இவ்வண்ணம் நெடுநாள் எம்பெருமான் திருமணக் கோலக் காட்சியை என்று அருளுவாரோவென்று அகத்

திய முனிவர் மீண்டும்வேண்டுவார்; திருமணக்கோலக் காட்சியைமறைக்காட்டில் அருளுவோ மென்று எம்பெருமான் திருவாய் மலர்ந்தருளியதை எண்ணும் போதே பெருமகிழ்ச்சியை எய்திய யான் அக் காட்சியைக் கண்டபோது உண்டாகும் மகிழ்ச்சியை என்று பெறுவேனோ வென்பார். இமயமலையில் நடை பெறும் திருமணத் தரிசனத்திற்கு அடைந்திருந்த என்னைத் தலைவராகிய சிவபெருமான் இங்கு ஏவியபொழுது இவ்வண்ணம் தாமதிப்பார் என்பதைச் சிறிதும் உணர்ந்திலேனேயென்பார் எம்பெருமான் அருளிய வண்ணம் இனியாவது விரைந்து வந்து தரிசனந்தராதிருப்பராயின் என்னுயிர் தரியாதே யென்பார். ஒரு சமயம் பின்னே வந்தருள்வாரேயானால் நான் பின்னிருந்து காண்பேனோ வென்பார். தலைவரே உமது திருமணத்தையே காண உம்முடைய நல்வரவையே கருதியதன்றி வேறொன்றிலும் பற்றாத என் மனம் மணக்கோலங் கண்ட பின்னும் வேறொன்றிலும் பற்றாது, உம்மையே பற்றி நிற்கும் என்பார். தலைவர் இமயமலையில், அன்று யாவரும் அறிய என்னை யொத்தவன் நீயே என்றும், நீ விரும்பிய வண்ணம் மணக்கோலத்தை மறைக்காட்டில் அருளுவோமென்றும் திருவாய்மலர்ந்தருளியவர் இதுவரையிலும் வந்தருளாதிருப்பதை நினைந்து எனதினிதாகிய உயிர் மிகவும் வருந்துகின்றதே யென்பார். சிவபெருமான் மணக்கோலத்தை மறைக்காட்டில் காட்டியருளுவோ மென்றபொழுது பிரிவையுன்னி யான் முன்னே யடைந்த துன்பம் நீங்கி எவ்வண்ணம் இன்புற்றேனோ அதுபோல இன்னும் அவர்

சொல்லிய வண்ணம் வந்தருளுவார். சொன்ன சொல்லி னின்றும் தடைப்படார் என்றும் தேறுவார். இன்னமும் முனிவர், காதலனும் காதலியுமாய்க்கூடி யின்புற்றும் மேலே முத்தியும் பெறுதற் பொருட்டும் சிவம் சத்தி யென்னும் இரண்டுங் கூடிய திருமணக்கோலத்தை யென்று காண்பேனோ என்பார். சிவமுஞ் சத்தியும் சேர்ந்தாலன்றி உலகத்தில் யாவரும் எதையும் பெறார்களே. ஆன்மாக்கள் அவரவர் செய்த வினைக்கீடாகப் பிறந்து ஓரறிவுமுதல் ஆறறிவு முடையரானாலும், கண்ணிற்கொளி யியற்கையில் இருந்தாலும் கதிரவன் தோன்றி ஒளியை உதவினாலன்றிக் கண் உலகினில் எதையுங் காண முடியாது. அதுபோலச் சிவமும் சத்தியுங் கூடினாலன்றி உலகத்தில் ஒரு செயலும் நடைபெறாதே என்பார். அன்றியும் ஈசனது அருள் தானே சக்தி யென்று சொல்வது. அவ்வருளாகிய சத்தியை யின்றிச் சிவம் இயங்காதே. ஆதலால் சிவமும் சத்தியும் என்று கூடுபோ, கூடிய மணக் கோலக்காட்சியை யென்று தான் காண்பேனோ என்று இவ்வண்ணம் அகத்திய முனிவர் இடைவிடாமல் பேரன்பால் உள்ளம் உருகித் திருமணக் கோலக் காட்சியைக் காணப் பேரவாவுற்றுச் சிவபெருமானைத் தியானித்துக் கொண்டிருந்தார் என்று சூத முனிவர் நைமிசாரணிய வாசிகளுக்கு உரைத்தருளினார்.

அகத்திய முனிவர் பூசித்த வத்தியாயம் முற்றிற்று

---

## திருமணக் கோலங் கண்டவத்தியாயம்.

சிவபெருமான் திருவருளையே சிந்தித்துச் சடைமுடி முடித்துத் தவ சிரேஷ்டர்களாய் விளங்கும் முனிவர்களே! ஒளி வீசுகின்ற கைலாசபர்வதத்தில் என்றும் நித்தியராய் வீற்றிருக்கின்ற கருணைக்கடலாகிய சிவபெருமான் தன் திருமணக்கோலக் காட்சியை அருந்தவச் செல்வராகிய அகத்திய முனிவருக்கு அருள்வாராய்த் திருவுள்ளம் கருணைகூர்ந்து அருளிய தன்மையை எனக்கியன்றவாறு சொல்லுகின்றேன். கேட்பீர்களாக என்று சூதமுனிவர் சொல்லுவாராயினர்: தேவகம்பிபனணவன் என்றும் சிறப்புற்று விளங்கும் வேதவனத்தில் தலைவராகிய சிவபெருமான் திருமணக் காட்சியை அகத்திய முனிவருக்கு அருளும் பொருட்டுத் தோற்றம் செய்வார். ஆதலால், நாம் முன் இமயமலையை அலங்கரித்தது போல வேதவனமும் சிறந்து விளங்கும்படி செய்ய வேண்டும் என்றுகருதி அலங்காரஞ் செய்ததாய் வேதவன நகர்ப் புறமெல்லாம் மேகமண்டலத்தை அளாவுகின்றசெழித்த பூஞ்சோலைகளும், அழகிய பூக்கள் நிறைந்த வாவிகளும், ஓடைகளும், ஆகாயத்தை அளாவிய மதில்களும், உன்னதமான கோபுரங்களும், வீதிகளிலிலங்கும் அழகிய மாளிகைகளும் உப்பரிகைகளும் ஆடலரங்குகளும் அழகிய சித்திரங்களமைந்த அனேக மண்டபங்களும், வாத்திய மண்டபங்களும் வினோத கோஷ்டிகள் நடக்கும் சிங்கார மண்டபங்களும்

குபேரனும் இந்திரனுங் கண்டு அதிசயிக்கத் தக்கனவாய் முன்னினுஞ் சிறந்த சிறப்புக்களுடன் விளங்கின.

தவசிரேஷ்டராகிய அகத்திய முனிவர் அகத்தியாம் பள்ளியினின்றும் எம்பெருமான் திருமணக்கோலங்கரு திய வேதவனத்தைக் குறித்து வருவாராயினர். அங்கு ஆடுங் கொடிகள் மணக்கோலங் காண அழைப்பனபோலக் காணப்பெற்றன. வீதியினுள்ளே புகுவார் வீதிகளில் மாட வரிசைகளையும் உப்பரிகைகளையுமுடைய மாளிகைகளில் விபூதி ருத்திராக்ஷதாரிகளாய்ப் பிரமதேவனைப் போலப் பொலிந்து விளங்கும் வேதவேதியர்கள் வேதாத்திய யனம் செய்பவர்களும் யாகங்களைச் செய்பவர்களும் பரி சுத்த மனமுடையவர்களாய் இனிய வசனங்களையே மொழிந்து ஈஸ்வர பக்தியிற் சிறந்து விதித்தபடி தங்கள் நியமங்களை இயற்றும் அந்தணர் இருக்கைகளையுங் கண்டு களிப்புற்றுச் செல்லுவார். இன்னும் ஒவ்வொரு மாளிகை களிலும் இல்லறத்தை நடத்தும் ஆடவரும், பெண்களும் ஒருவரில் ஒருவர் மிக்க அன்புற்று நல்லகுணங்களிற் சிறந்து கற்பின் மேம்பட்டு என்றும் ஒன்றாலும் வாட்ட மும் கோபமுமின்றி முகப்பொலிவும் இனிமையுங்காட்டி யாவரிடத்தும் நிறைந்த வாஞ்சை யுடையவர்களாய் எந்த நேரத்திலும் அமுதம் போலும் இனிய சொற்களைப் புன் முறுவலுடன் மிருதுவாய்ச் சொல்லியும், இன்னுந்தன் நாயகனே தெய்வம், நாயகன் சொல்லும் சொற்களே மந்திரோபதேசம் தன் நாயகனுக்குச் செய்யும் பணியே

பெரிய தவமென்றெண்ணி இயற்றுபவரும், ஒவ்வொரு நாளும் வருவிருந்தினரை ஏற்று அன்பும் மனமகிழ்ச்சியு முடையராய் அவர்க்கு விருந்து அளித்தலும், கல்வியினாலும் அறிவினாலும் ஒழுக்கங்களினாலுஞ் சிறந்த பெரியோர்களையும் சிவனடியார்களையும் விரும்பி அழைத்து வணங்கி, அவர் மகிழும்படி வேண்டுவன உதவியும், இன்னும் யாவருக்கும் அன்னதான முதலிய நானா தருமங்களையும் அகமகிழ்வுடன் முகநயங்கொண்டு இனிய வசனங்களைச் சொல்லி இயற்றி யும், நல்ல கீர்த்திகளை நிலைபெற நாட்டியும், விதித்த விதி யில் நின்று சிறிதும் மாறுதலும் குறைவுமின்றி இல்ல றத்திற் குரிய தரும பத்தினியினிடத்தில் நல்ல புத்திரப் பேறு கருதிக் கூடி யின்புற்றும் அறிவிற் சிறந்த மக்கட் பேறுடையவர்க ளாயுள்ளார் வசிக்கின்ற வீதிகளையுங் கண்டு களிகூர்ந்து அப்புறம் செல்லுவார்.

இவ்வண்ணம் செல்லும் முனிபுங்கவர் அப்பால் விளங் கும் மடாலயங்கள் தோறும் அருந்தவச் செல்வர்களாய் ஆகமமுனிவர் விபூதிருத்திராட்சதாரணங்களுடையவராய்ச் சிவாகமத்தில் விதித்த பிரகாரம் சிவபூசையை அன்புடன் இயற்றுபவரும் அன்றியும் முன்றிலில் விளங்குந் திட்டை கள் தோறும் புலித் தோலேனும் மானுரியேனு மிட்டு அதன் மீது இருந்து ஆரியம் திராவிடமென்னும் ஆகி நூல் இரண்டினும் நிபுணர்களாய்ச் சிவாகம சாத்திரங்களை யுஞ் சிவபுராணங்களையும் படனஞ் செய்பவர்களும் அன்றி யும் அவற்றையும் அவற்றின் பயன்களையும் மாணாக்கர்

களுக்கும் அடியார்களுக்கும் எடுத்துரைப் போருமாய் அமர்ந்து விளங்கும் வீதியையுங் கண்டு களி கூர்ந்து செல்லுவார். இன்னும் நிஷாத ரிஷப காந்தாராதி சப்த சுரங்களுமமைந்து இனிய கானங்களை யாழிசையுடன் கூட்டிப் பாடும் பாடலரங்குகளும் பாவராகதாளம் ஆகிய மூன்றும் ஒருங்கு பொருந்தி யாரையும் இனிமையுடன் மகிழும்படி பரதநாட்டியங்களைச் செய்யும் மங்கையர்கள் அப்பொழுதலர்ந்த செந்தாமரை மலர்போலும் முகமும் கொவ்வைக் கனி போலும் அதரமும், முல்லை யரும்பு நிரைத்தாற் போலும் தந்தபந்தியும் கருநெய்தற் பூப்போன்ற கண்களும் பொற் கிண்ணம் போலுந் தனங்களும் குயிலினும் இனிய இசையை யுடையராய் ஒளிவிடுகின்ற உயர்ந்த இரத்தினாபரணங்களை அணிந்த மங்கைப் பருவத்தையுடையவர்களாய்ப்பரத நாட்டியங்களியற்றும் ஆடலரங்குகளுங் கண்டு செல்லுவார். இன்னும் அன்னசாலைகளும் தண்ணீர்ப் பந்தர்களும் இலங்கக் கண்டும், மேலும் ஆரியம், திராவிடம், ஆகிய கல்வி பயிலுங் கழகங்களுங்கண்டு களிப்புற்றுச் செல்லுவார். அன்றியும் ஆன்மாக்கள் தோறும் அந்தரான்மாவாய் விளங்குஞ் சிவபெருமான் சிவம் சத்தி என்னும் இரண்டும் பிரிவுற்றிருந்தமையால் திருமால் பிரமனாதி தேவர்களும் தம் தேவியர்களுடன் கூடித் துணைமுலைப் போகமின்றி நெடுநாள் சனகாதியர் பொருட்டு யோகிருந்த சிவபெருமானைப்போல இருந்தனர். அன்றியும்உலகினரும் ஆண்பெண்கூடி இன்புறாதிருந்தனர். அதுபோது இமயமலையில் உமாதேவியாரைச் சிவபெருமான் திருமணஞ் செய்து

உமாசமேதராகிய மாத்திரத்தில், ஒருவறிஞரிடத்தே இரப்போர் சென்று இரக்கக் கொடுக்கக் கிடையாத வறிஞரும் இரப்போருமாகிய இருவரும் துன்ப முற்றிருப்பதை யொத்து இருந்த திருமால் முதலிய தேவரும் உலகினரும் பருத்தகொங்கையும் அழகும்வாய்ந்தமங்கைப் பருவத்தை யுடையபெண்ணும் மணமகனும் புணர்ச்சியின்றி நெடுநாள் துன்பமுற்றிருந்து பின்னர்க் கூடி இன்பமுற்றாற் போல அத் துன்பம் நீங்கிக் காமவேட்கை யுடையரானார். வீணை யிசையிலும் இனிய மிருதுவாகிய சொற்களைப்புன்முறுவல் காட்டி அன்புடன் சொல்லும் மங்கையரும் மன்மதனை யொத்த அழகுடைய ஆடவரும் ஒருவரை யொருவர் விரும்பியிருந்தும்முன்னர்க்கூடியின்புறாதிருந்தது, இளமை வாய்ந்த சிறுவரும் சிறுவருங் கூடியும், ஆடவரும் ஆடவருங் கூடியும் மங்கையரும் மங்கையருங் கூடியும், பேடியும் பேடியுங் கூடியதும் போலாகும். இவ்வண்ணம் நெடுநாளாய் இன்புறாதிருந்தவர்கள் யாவரும் சிவபெருமான் உமாதேவி யாரை மணஞ்செய்து கூடிய மாத்திரத்தில் சூத்திரப் பதுமையையாட்டுவான் ஆட்டிய மாத்திரத்தில் எப்படிப் பதுமையாடுமோ அதுபோல் யாவருங்காம வேட்கை யுடையரானார்.

அது போதே, ஆடவரைப் பெண்கள் நோக்குவார். பெண்களை ஆடவரும் நோக்குவார். ஆடவன் பெண்ணைக் கண்ட மாத்திரத்தில் தான் கூடி இன்புற வேண்டுமென்ற ஆசை மிகுதியால் அவளழகையே நோக்குவான். நோக்கி

அழகிற் சிறந்த இவள் ஒரு தெய்வப் பெண்ணோ மயிலோ மானுடப் பெண்தானோஎன்பான். அங்ஙனம் கூறியவன் இதுகாறும் கூடியிருந்த என்னை இவள் இன்று மயக்கினாள் என்பான். அவளும் மையலுற்ற தலைவனைப் பார்ப்பாள். அதனைக் கண்ணுற்ற காதலன் இவள் என்னைக்குறித்துப் பார்த்த பார்வை என்னை வருத்துகின்றதே. இவள் கண் வேலோ, நஞ்சோ, அம்போ என்று மனம் நைவான். இவ்வண்ணம் அவன் வருந்துவது கண்டு மங்கை பின்னும் அவனையே நோக்குவாள். நோக்கிய மாத்திரத்தில் ஆடவன் கொண்டதுயர் நீங்குவனாவான். அங்ஙனம் துயர் நீங்கியது, மதுரையில் சோமசுந்தரப்பெருமான் தன்னிடத்து வாதித்த நற்கீரனை அனற் கண்ணால் நோக்கி வருத்த வருந்திய நக்கீரன் சகியாது மீளவும் வேண்டித் துதிக்கப் பெருமான் கருணைகூர்ந்து பின் அருட்கண்ணால் நோக்கிக் காத்ததைபொத்தது. தலைவன் தன்னைக் காதலி முன்னே பார்த்த பார்வை காமக் குறிப்பை வெளிப்படுத்தி என்னை வருத்த வந்த பார்வையென்றும் பின்னே பார்த்த பார்வை தலைவிக்கு என்னிடத்தில் நிகழ்ந்த அன்பினால் உண்டாகிய பார்வையென்றுந் தேறுவான். இன்னும் ஒருவன் ஒரு மங்கையைக் கருதிப்பார்த்தான். அப்படிப்பார்த்தநாயகன் 'நான்விரும்பிப் பார்த்த மாது என்னையே வருத்துகின்றாள்' என்பான். என்னெனில் அம் மாதை யான் குறிக்கொண்டு பார்க்கும் போது என்னைச் சிறிதும் பாராது பூமியை நோக்கி நின்றாள். யான் பாராதபோது அவள் என்னைக் கடைக்கண்

ளால் குறித்துப் பார்த்து வெளிப்படாமல் புன்முறுவல் காட்டிமெல்ல நகைக்கின்றாள் என்பான். அயல் நின்ற மற்றொருதலைவன் ஒருமங்கையைப்பார்த்தான். தான் அம் மாதை விரும்பிப் பார்த்ததை அவள் நன்குணர்ந்தும் தனித்தவளாய் நிற்கும் அப் பெண் பகைவரைப் போல வெறுப்பான சொற்களையே சொல்லுகின்றாள். யான் ஒரு பகைமையுஞ் செய்யாது காதலித்து விரும்பிய என்னை மிகுந்த கோபக் குறிப்பாலும் நோக்குகின்றாள் என்றும் வருந்துவான். இவ்வாறு வருந்திபவன்பின்னர் ஆலோசித்து அவள் எந்தக்காரணத்தாலும் தனக்குப்பகையில்லாதவள். மேலும் மாதர்கள்உள்ளன்பாகஞ்சொல்லும்கடுஞ்சொற்களும் பகையில்லாது பார்க்கும் கோபப் பார்வையும் ஆசைக்குறிப்பால் நிகழுமென்றே தெளிவுறுவான். இன்னமும் ஒருநாயகன் ஒரு மாதைக் காதலித்து நோக்கவும் அவள் தன்னை விரும்பிப் பார்த்த அந் நாயகனைச் சிறிதுங் கருதாது பொது நோக்காய்ச் சென்றாள். அப்படி அவள் செல்ல அவ்வாடவன் 'நாம் விரும்பியமாது நம்மை விரும்பாது செல்லுகின்றாளே யென்றுமனம் வருந்தினான். இவ்வண்ணம் வருந்திய தலைவனே, அவள் மீது தான் கொண்ட காதலால் மீளவும், பெண்கள் தாம் விரும்பிய காதலனை விரும்பி நோக்காது அயலார் போலப் பொதுநோக்கு நோக்கிச் செல்லுதலும் ஆசையுள்ளாரிடத்தேயுண்டு. ஆதலால் இவள், நாம் காதலித்ததுபோல நம்மைக் காதலித்தவளே என்றுந் தேறுவான். மற்றும் ஒரு தலைவன் அயல் நின்ற ஒரு மங்கையைப் பார்த்தான். அம் மாதும் இவன்

தன்னை அன்போடு பார்த்ததை யுணர்ந்து தானும் அவனைப் பார்த்தாள். பார்த்தாளாயினும் இசைவான சொல்லின்றி வேற்று மொழி சொல்லிச் சென்றாள். அதனை உணர்ந்த நாயகன் "நான் பார்த்ததை யுணர்ந்து அவளும் என்னை இனிய பார்வையால் பார்த்தும் இசைவில்லாத சொற்களைச் சொல்லிச் செல்லுகின்றாளே" என்று மனம் நைந்துருகுவான். அவ்வண்ணம் நைந்து உருகியவன், மீளவும் காதன் மீக்கொண்டு, அம் மாது உள்ளம் விரும்பி என்னைப் பார்த்த பார்வை எனக்கு இசைந்த பார்வையே. முற்றும் என்னைப் பார்த்த போதே யான் அவளிசைந்ததை யுணர்ந்தேன். ஆதலால் "கண்ணொடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள் என்ன பயனு மில" என்றபடி நாம் புணர்ந்து இன்புற நேர்ந்தவளே என்றுந் தேறுவான்.

அகத்திய முனிவர் இச் சம்பவங்கள் நடைபெறும் வீதிகளைக் கடந்து செல்லுங்கால், தலைவராகிய சிவபெருமான் உமையோடு நெடுநாள் கூடாது இமாசலத்தில் இதுபோது மணஞ்செய்து கூடப் பெற்றதால் நெடுநாளாய்ப் புணர்ச்சியின்றி ஊடினார் போலக் கூடாதிருந்த யாவரும் அவ்வூடல்நீங்கிக் கூடுந்தகைமையுடையரானார்கள். ஊடலாவது நாயகனும் நாயகியும் காரணமின்றி அவசியமில்லாத குற்றஞ் சொல்லி ஒருவரோ டொருவர் கூடாது உரைமறுத்திருத்தல். அவ்வண்ணம் சிறுபோது உரைமறுத்துச் சிறிதுனி யுற்ற அவ்விருவரிடத்தும் பொருந்தியுள்ள அன்பு என்னும் தோழனுந் தோழியும் அவர்கள் ஊடல்நீக்கிக்

கூடச் செய்தல் போல ஒருவரை யொருவர் குறிக்காது பொது நோக்காய் நோக்குவார். நோக்கி யாதொரு காரணமுமின்றி அவசியமில்லாத வெறுப்புடைய சொற்களால் அன்பு மிகுதியினாலே நேர் நோக்காது பேசுவார். ஒருவரை யொருவர் கைமுதலிய அங்கங்களில் ஏதேனும் ஒன்று படும்படி நெருங்குவார். அப்படிப் பட்ட மாத்திரத்தில் தாங்கள் உணராது தீண்டியது போல மனந்திடுக்கிட்டுக் காட்டி மன்னிப்புச் சொல்லிக் கொண்டு விலகுவார். அப்படி விலகினவரை விலகாத ஒருவர் கோபக் குறிப்பும் விருப்புக் குறிப்புங் காட்டாது 'என்னை யார் தொட்டார்' ஒருவருந் தொடவில்லையே, யானும் ஒருவரையுந் தொடவில்லையே, அப்படியிருக்க, தங்கள்தங்கட்குரிய அங்கங்களைத் தொட்டதற்குத் தாமே வருத்தப்பட்டு மன்னிப்புச் சொல்லிக் கொள்வதும் உண்டோ வென்பாள். ஆனால் அதுவும் நான் சொல்லலாகாது தங்கள் தங்களுக்கு ஆசை மிக்க மங்கையர்கள் சொன்னால் அது மனங்குளிர்ந்து சந்தோஷமா யிருக்கும் என்றும் சொல்லுவாள். அவ்வண்ணம் நாயகனும் நாயகியும் அன்பின் மிகுதியால் சல்லாபமாகி ஊடல் நீங்கிக் கூடுந்தகைமை யுடையரானார்கள். இன்னமும் ஒரு ஆடவன் ஊடலில் அமைந்துள்ள தன் காதலியை அவ்வூடல் நீங்கித் தான் கூட வேண்டுமென்ற எண்ணத்தால் என்ன செய்வான்: தனக்கு ஏதோ ஒரு புண்ணிய தலத்திலிருந்து வந்த ஈசுவரப்பிரசாதமாகிய விபூதி குங்குமத்தைத் தன் கையிலெடுத்து அந்தத் தலமூர்த்தியின்பெயரைவாயினால்துதித்துத்தன்சிரத்திலும்

நெற்றியிலும் தரித்துக்கொள்வான். அப்படித்தான் தரித்துக்கொண்டபின் அந் நாயகனை தன்னோடு ஊடலாகிப் பேசாதிருக்கும் காதலியை நெருங்கி அந்த ஈஸ்வரப் பிரசாத விபூதிகுங்குமங்களைத்தன் கையிலெடுத்துவிரலால்குழைத்து அத்தல மூர்த்தியின் திருப்பெயரை முன்னிலும் தொனிபடத் துதித்து இப் பேசாமடந்தையைப் பேசும்படி செய்யும் என்று பரிபாச மொழியுடன்காதலியாகிய மங்கையின் நெற்றியில்தரித்து விடுவான். ஆடவன் இவ்வண்ணம் அன்பினால் செய்ததால் அம்மாது ஊடலால் அமைந்தவளேயாயினும்; அசைவின்றி நின்று அதனை யேற்றுக்கொண்டாள். ஆயினும் அம் மாது யாதொரு உரையும் சொல்லாது அசைவின்றி நின்றதால் நாயகன் இது வென்ன அசைவில்லாத கற்பாறையோ பேசாத சித்திரப்பாவையோ என்பான். அது கேட்டு அம் மாது எதற்காக ஒருவரிடத்தில் அனாவசியமாய்ப்பேசுவார்கள் என்று சொல்லிப் பின் உரையாடாமலே மௌனமாகியே இருந்தனள். இருந்தாளாயினும் மாது தான் கொண்ட காதல் மிகுதியால் பக்கத்தில் பொற்கிண்ணத்தில் நிறைந்திருக்கும் இனிய வாசனை கமழ்கின்ற சந்தனத்தைக் கொண்டு வந்து காதலன்மார்பில் பூசுவாள். அவனும் அவளிருந்தது போல அசையாது உரையாடாது இருந்தனன். காதலன் மார்பிற்குச் சந்தனம் பூசிப் பின்னர் அம் மாது அவன் கையை ஒரு கையால் ஏந்தித் தாங்கிக்கொண்டு மற்றொரு கையால் அக் கைக்குச் சந்தனம் பூசுவாளானாள். அதுபோது நாயகன் காதலியின் முகத்தைத் தனது ஒருகையால் மிருதுவாய்ச் சிறிது நிமிர்த்து மற்

ெருருகையால் தக்கோலங் கூடிய பாகடை யென்னும் தாம்பூலத்தை அவள்வாயில் தன் கையால் பெய்து ஊட்டுவான். அம்மாது அசைவின்றி நாயகன் கைக்குச் சந்தனத்தை வைத்த வண்ணமே பூசாதிருந்து, காதலன் ஊட்டிய பாகடையை வாயில் ஏற்றுக்கொண்ட பின்னர்த் தான் அத்தலைவனுக்கு அன்பாகச் சந்தனம்பூசி இனிதுறுவாள். ஒரு நாயகன் தன் அன்பின் மிக்கதலைவிக்கு "உன்னை அலங்கரிக்கும் வண்ணப்பெண் எழுதியிருப்பதினும் யான் அழகுபெற எழுதுவேன்' என்றுசொல்லிதூரிஎன்னும்எழுதுகோலாகத் தன்கைவிரல்களையேகொண்டு தலவியின்பொற்கிண்ணம்போனுள்ள தனங்களிலும் தோளிலும் * தொய்யில் என்னும் கோலத்தைச்சந்தனக்குழம்பால்எழுதுவானுன். இவ்வண்ணம் காதலனும் காதலியும் அனேக சரச சல்லாபங்களையுடையவர்களாய்க் கூடுந்தகைமை யுடையவரானுர்கள்.

இன்னும் ஆடவரும் பெண்களுங் கூடாது ஊடியிருந்தவர்கள் இந்த ஊடலிலுண்டாகிய இன்பம் போல் தேவலோகத்திலும் அனுபவிக்கக் கிடையாது, எப்படி யெனில் நீரானது எவ்வண்ணம் தானின்ற நிலத்தினியல்பினதாகவாகுமோ அதுபோல என்னைமணந்த எனது நாயகன் என்னுடைய குணத்திற்கு இசைந்த வராதலால், ஊடியிருந்ததுவும் எங்கட்குப் பேரின்பமேயாம் என்பாள். அவ்வண்

---

* இலகியவெழுது கோலாலிளையவர் முலையுந்தோளும்
நலமிகவெழுது கோலநவின்றிடுந்தொய்யிலென்ப: என்பது நிகண்டு.

ணம் நெடுநாளாய் ஊடியிருந்த யாவருங் கூடியின்புறுங் குறிப்புடையராய் விளங்கும்வீதிகளையுங் கடந்து அகத்திய முனிவர் செல்லுவாராயினர். இவ்வண்ணம், வீதிகளில் காதலர்களும் காதலிகளும் வெகுநாட்களாய்ப் பிரிந்திருந்து இப்பொழுது எம்பெருமானும் உமாதேவியாரும் திருமணஞ் செய்ததின் குறிப்பாக, ஊடலும், ஊடல் நீங்கிக் கூடலும் ஆகிய தன்மை யுடையவர்களாய் இருப்பதைக் கண்டு, முனிபுங்கவர் அத் திருமணக் கோலத்தைத் தான் அன்று அவசியம் காணலாம் என்ற தேர்ச்சி கொண்டு பெருமகிழ்ச்சியுடன் செல்லுவாராயினர்.

பின்னரும் வீதிகளும், மாளிகை முன்றிலும் பந்தல் விதானங்கள் முதலியன அழகுற அமைத்தும், வாழை கமுகுகள் நாட்டியும், மகர தோரணங்களால் அலங்கரித்தும் விளங்கின. பூரண கும்பங்கள், நிலைக்கண்ணாடிகள் இடபம், இரட்டைச் சாமரங்கள், சௌந்தரியம்நிறைந்த மங்கையர்கள், சுவத்திகம், சங்கம், இரத்தின தீபங்கள் ஆகிய அட்டமங்கலங்களும் அலங்காரமாய் அமையப் பெற்று விளங்கின. இந்த வைபவங்களை யெல்லாம் முனிவர்பெருந்தகை கண்டு களிப்புற்று "யானை வரும் பின்னே மணி யோசை வரும் முன்னே" என்றபடி அங்குத் தோற்றிய தோற்றங்கள் யாவுங் கண்டு அகமகிழ்ந்து செல்லுவாராயினர்.

திருமணங்காண வேத்திரப் படையோராகித் திருநந்தி தேவர் முன்னே வர, ஆயிரங்கோடி உருத்திரர்கள் சூழ

அக்கினி யுருத்திரனும் நூற்றுநாற்பது கோடி பூதர்கள் சூழக் கூர்மாண்ட உருத்திரனும், ஒரு கோடி உருத்திரர் சூழஆடகேச உருத்திரனும் ஒரு லட்சம் பூதப்படைகள் சூழ வீரபத்திரவுருத்திரனும் மேலும் நூறு கோடி பூதப் படைகள் சூழச் செண்டாயுதத்தையுடைய மாசாத்தனும் ஏகாதச வுருத்திரர்களும் மற்றுமுள்ள சகல உருத்திர கணங்களும் சூக்கும புவனவாசிகளாகிய புத்தியட்ட கரும் அட்ட மூர்த்திகளும் நூறு பூதப் படைகள் சூழக் குண்டோதரனும், இருநூறு பூதப்படைகள் சூழத்தண்டக னும், பினுகியும் நூற்றைம்பது பூதப்படைகள் சூழப்பாணு கம்பனும், அனேககோடிகணங்கள்சூழச் சங்குகன்னனும், காளகண்டனும், தண்டியும், நீலனும், கரனும், விச்சுவமாலி யும்அனந்தஞ் சேனையோர் சூழ யாவரும் வந்தனர். இன் னும் பாஞ்ச சன்னியம் என்னும் சங்கமும், சுதரிசனம் என்னுஞ் சக்கரமும் கௌமோதகி என்னுந் தண்டமும், நந்தகம் என்னும் வாளும் சார்ங்கம் என்னும் வில்லும் ஆகிய பஞ்சாயுதங்களையுந் தரித்துச்சகலாலங்கார பூஷித ராய் இலட்சுமி பதியாகிய திருமால்வந்தனர். சதுர் வேதங் களையும் உணர்ந்த நான்கு திருமுகங்களோடு விளங்கிச் சரஸ்வதி நாயகராகிய பிரமதேவர் வந்தார். தேவலோகத் திற் கிறைவனாகிய சசிபதி என்னும் தேவேந்திரனும் வந்தார். அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபே ரன், ஈசானன் ஆகிய யாவரும் தங்கள் பத்தினிகளுடனே வந்தனர். மற்றுமுள்ள தேவர்களும் தங்கள் பத்தினிக ளுடனேவந்தார்கள். யக்ஷ ராக்ஷத தைத்தியாதி சித்தசாத்

திபர்கள், கந்தருவர், முதலியயாவரும்வந்தனர். தவசிரேஷ்டர்களாகிப முனிவர்களும் தங்கள் பத்தினிமாருடன்வந்தனர். நாரதர், தும்புரு, முதலிய தேவரிஷிகளும் வந்தனர். மரீசியாதி சப்தரிஷிகளும் வந்தனர். வேதங்கள், ஆகமங்கள், மந்திரங்கள் ஆகியயாவும்வடிவெடுத்து வந்தன. யுகம், வருடம், அயனம், மாதம் முதலியகாலங்களும்வடிவுடையனவாய் வந்தன. சகலதேசத்துமாந்தர்களும் பூவுலகப்பெற்ற புகழேபுகழ்என்று துதித்துப்பெருமகிழ்ச்சியுடன் வந்தனர்.

மேலும், பேரிகை, கொக்கரை, சல்லரி, துந்துபி, காளம், சின்னம், குடமுழா, தண்ணுமை, தடாரி, சங்கமாதிய வாத்தியங்கள் யாவும் மங்கல முழக்கம் முழங்கின. இன்னமும் சத்திரம், சாமரம், துவசம் முதலிய விருதுகள் அலங்காரமாய் நிரை நிரையாய் விளங்கின. இவைகள் எல்லாவற்றையும் அகத்தியமுனிவர்கண்டு களிப்புற்று நெடுநாள் மிடியால் வருந்தியவன் ஒரு பெரும்புதையலைக் காணப்பெற்றபோது கொள்ளும் மகிழ்ச்சியினும், தன்னைப் பிரிந்து தூரதேசஞ் சென்றிருந்த தனது நாயகன் தனதூர் முனைக்கு வந்து விட்டான் என்பதைக் கேட்ட தலைவி கொள்ளும் மகிழ்ச்சியினும் பெருமகிழ்ச்சி யுடையராய் முனிவர்பெருமான் ஆலயத்தினுள்ளே சென்றார். அந்தத் தேவராதியோர்களும் இலக்குமிதேவி, சரஸ்வதி, இந்திராணி முதலிய இயற்கை யழகிற் சிறந்த யாவர்களும் சகல அலங்காரபூஷிதர்களாய் "அகத்திற்கொண்ட மகிழ்ச்சி முகத்திற் காட்டும்" என்றபடி முன்னினுஞ்சிறந்து விளங்கி

ஞர்கள். இன்னமும் இனிமை என்பதற்கெல்லாம் இனிய தாய்ச்செவிக்கினிமை பயக்கும் வீணையின் ஒலியும், வேய்ங் குழலின் ஒலியும் இனிமையான பாடலின் ஒலியும் மத்த ளத் தொனியும், ஒருங்கு அமைந்து விளங்குவதைச் செவிக்கு இனிய விருந்தாகவுங்கொண்டு இயற்கையினுலுஞ் செயற்கையினுலும் உத்தம ஜாதியர்களாயுள்ள யாவரும் சந்தனக் கலவை முதலியனவும் புஷ்பங்களும் அணிந்து கமழ்கின்றசுகந்தங்கள்மனோரம்மியத்தையும்உற்சாகத்தை யும் உண்டுபண்ண இன்னும் பலவித காட்சிகளையும் முனி வர்பெருந்தகை கண்ணிற்கு விருந்தாய்க்கண்டும் கானுதி ரசங்களைச் செவிக்கு விருந்தாய்க் கேட்டுங் களிப்புறுவா ரானுர்.

உலகமெல்லாம் செய்த அரிய தவம் ஒரு புண்ணிய வடிவெடுத்து விளங்குவதையொப்பச் சராசரமாகிய பிரபஞ் சம் யாவும் தத்தம் நிலையிற் றிரியாது வாழத் தேவராதிய சகல ஜீவர்களும் எல்லா ஐசுவரியங்களையும் போகங்களை யும் பெற்று இன்புற, பூவுலகம் என்றும் பொலிவெய்த, வேதசிவாகம முறை மேலும் மேலும் வாழ, அடியார் கள் அகமகிழ, சித்திரை மாதஞ் சிறப்பெய்த, சுக்கில பட்ச சத்தமிகூடிய செங்கதிரோன் வாரம் சிறந்துவிளங்க அருக் கனும் அகமகிழ்ந்து உச்சநிலையில் அமர்ந்திலங்க ஆகிய நல் லோரையும் நலமாா, அகத்தியமுனிவர்செய்த அருந்தவம் கைவரப்பெற்றுப் பேரானந்தமுற வீணை வேணு மிருதங்க காதி வாத்தியங்கள் ஒருங்கே இனிமையாக ஒலிக்க, தேவர்

கள் புஷ்பமாரிபொழிய, கங்கைமுதலிய மங்கையர் சாமரங்கள் வீச, காளிகள் கவிகைதாங்கி நிற்க, அழகிய மங்கலப் பெண்கள் மங்கல வாழ்த்தொலி செய்ய, சுந்தரி அடப்பை தாங்கி நிற்க, திலோத்தமை கண்ணாடி ஏந்தி நிற்க, அரம்பை பொற்காளாஞ்சி ஏந்தி நிற்க, ஊர்வசி துவசந்தாங்கி நிற்க, மேனகை பொற்சரிகை யமைந்து விளங்கும் அழகிய வஸ்திரோபசாரஞ் செய்து நிற்க, இன்னமும் அனேக சிறப்புக்களெல்லாம் விளங்க, அச்சமயத்தில் எக்காலத்தும் யாவரும்காணாத அதிசயமாய் மகிழும்படியான ஒருபெரிய ஜோதியானது தோன்றிற்று. இருளை ஓட்டுஞ் சூரியனைப்போல ஒளி வீசுகின்ற செம்பொன்னினால் அமைத் திலங்கும் இரத்தின சிம்யாசனத்தின்மீது, எக்காலத்தும் விட்டு நீங்காத பொலிவு நிறைந்த அழகிய பரிசுத்த கர்த்தராய், ஒப்பும்உயர்வுமில்லாதவராய்விளங்கும்சிவபெருமான், தேஜோன்மயமாய்ச் சகலாலங்கார பூஷிதராய்த் அழகு என்பனவெல்லாம் ஒரு பெருந் தவஞ்செய்து தோன்றிய உருவமோவென யாவருங்கண்டு அதிசயிக்கும்படி பாதாதி மத்தக பரியந்தம் ஒளிவிடுகின்ற மாணிக்கமாதி ஒன்பது இரத்தினங்களாலும் அமைத்திலங்குந் தண்டை, சிலம்பு, பாதசாலம், மேகலாபரணங்கள், சூடகம், தொடி, விரலணி, முத்துமாலை, நவரத்தினமாலை, காதணி, தலைக்கோலம், புஷ்பாரங்கள் ஆகிய யாவும் அழகு விளங்க அணிந்தவளும் பெண்களிற் சிறந்த லட்சுமி சரஸ்வதி யாகிய இருவருஞ் சேடியராயமர்ந்திலங்க, சகல ஆன்மாக்களையும் பெற்றவளும் கற்பகதருவிற் படரும் காமருவல்லி யென்னப்பெரு

மானை நீங்காதவளுமாகிய பார்வதி தேவியாருடன் திரும ணக்கோலராய் எழுந்தருளினார் அவ்வானந்தக்கோலத்தை அகத்திய முனிவர் கண்குளிரத் தரிசித்தனர். அப்பொழுது பிரமதேவரியற்றிய ஓமாக்கினிப் புகையால் கண்சிறிது சிவந்து காட்ட நெற்றியில் சிறிது வேர்வை யரும்ப நாயக னும் நாயகியும் கைகோத்தலுடையராய்க் கையிற்கட்டிய காப்புடன் விளங்கி ஒருவர் தாம்பெற்ற அருமை மக்கள் தவம், கல்வி, தனம், தன்மை முதலிய எல்லாவற்றாலும் மேம்பாடுற்று உலகமெல்லாம் புகழ்ந்து கொண்டாட இரு மாந்திருப்பதைக்கண்டு தாய் தந்தையர் கொள்ளுமகிழ்ச்சி போல யாவருக்கும் ஆனந்தத்தை உதவும் சிவபெருமா னும் உமாதேவியாரும் பேரின்பப் பெருக்கினராய் விளங்கி னார்கள். அன்றியும் இருவரும் ஒருவரையொருவரின்றி அமைகலார், உவமையில்லார், திருவினிற் பெருகும் சீரார், சிறப்பினும் சிறப்பின் மிக்கார், மனம் வாக்குக் காயங்களால் அளக்க வொண்ணாக் காட்சியார், அழகுந் தவஞ்செய்து அழகுவேண்டும் ஒப்பில்லாத அழகர், உலகமெல்லாம் போற்றி உய்ப இவ்வண்ணம் திருக்கல்யாணக் கோலராய் விளங்கினார்கள். இந்தப்பிரகாரம் திருமணக் கோலக் காட்சி யைச்சிவபெருமான் உமாதேவியாருடன் காட்டியருளத்தரி சித்த தவசிரேஷ்டராகிய அகத்தியமுனிவர் கண்கள் இமை யாது கண்டு பெரிய ஆனந்தக் கடலில் மூழ்கி அன்பென் னும் வெள்ளத்தால் வேறுயாது முணராது உன்மத்தரைப் போல மயங்கித் தன்வசமின்றிப் பரவசராகிக் களிப்புமிகு தியால் ஆனந்தக் கூத்தாடி மனங்கரைந்து துதிப் பாராயினார்.

தேவரும் மறையுந் தேடிக் காணொணுத் திருக்கோ லத்தாய்
யாவையு மாவா யொன்று மல்லவு மாவா யாதர்
மூவருங் காணச் சொன்ன முறையினுங் கடந்தே கோலப்
பூவையோ டினிய வுன்றன் பொன்மணக் கோலங் கண்டேன்.

கண்டனன் யானே யின்று கண்ணினுக் கினிய மன்றல்
அண்டரு முனிவ ரேனோர் யாவரு மினிதே யேத்த
எண்டவிர் வீணை வேணு யின்னிசை செவி நிறைப்ப
முண்டக மலரோன் வேள்விச் சடங்கினை முறையே செய்ய.

அமிழ்தினு மினிமை செய்யு மமுதமோ வடிவு கொண்ட
உமையென விறையோ னென்ன வொளிர்கின்ற மணக்கோல
எமையும தடிமை யாக்கி யெமேழைமை தீர்த்தே யாள [த்தாய்
வமைவுறும் அழகா போற்றி யம்மை யப்பனே போற்றி.

சந்தத மறைக ளேத்துந் தனிப்பெருங் கருணைக் குன்றே
எந்தையே யிமவான் பெற்ற எழின்மிகு வுமையோன் டின்று
தந்திடு மணக்கோ லத்தின் றன்மையை யென்னசொல்வேன்
வந்தனை செய்வே னன்றி மனத்தினும் நீயேவாழி.

தரைத்தனி யின்பங் கூடத் தாமனு பவிப்ப தன்றி
உரைத்திட வரிதா மென்னி லுத்தம முத்தி யின்பம்
வரத்தினின் மிக்கார் கொண்டு மகிழ்வதே யன்றி வாயால்
தெரித்திட வாமோ வாயின் திருமணஞ் செப்ப லாமே.

என்று முனிவர் துதித்துக் காட்சியால் கொண்டகளிப்பின் செயலை யாரே கணிக்கவல்லார்! கண்டமாத்திரத்தில் மகிழ்ச்சியைத் தரும் மணம் வீசுகின்ற புதிய தாமரைமலரில் தேனையுண்ட வண்டெனஅயர்ந்து உரையாடாது மேலாகிய ஆனந்தமயமாய்ச்சிவோகம் பாவனையுடையராய்த்தாம்

உண்ட சிவானந்தம் மேலெழுந்து பொழிந்தாற் போலும் பல துதிகளாலும் துதித்து நிற்கின்ற அகத்திய முனிவரை நோக்கிக் கருணையங் கடலாகிய மணக்கோலப் பெருமான் தன தருமைத் திருவாய் மலர்ந்தருளுவாராயினர். "அருந் தவத்தால் மிகுந்தவன்பனே! உனக்கு வேண்டிய எத்தகைய வரங்களையானாலும் ஈண்டே யருளுவோம் கேட்பாயாக" என்று அருள் பாலிக்க, அகத்திய முனிவர் வேண்டுவாராயினர்.

தேவாதி தேவனாகிய திருமணக்கோல மூர்த்தியே! எத்தனையோகாலம் தேவர்களும் முனிவர்களும் மனமுருகி அருந்தவஞ்செய்து காண்பதற்கரிய இந்தமணக்கோலத்தை அடியேன் பொருட்டு இங்குத்தோன்றியருளியதினும் அரிய தோன்றுண்டோவென்று மனங்கசிந்துருகிப் போற்றி எம் பெருமானை அருளுவதொன்றுண்டு. அஃது பூங்கொம்பு போலும் நுண்ணிய இடைவாய்ந்த உமாதேவியாராகிய, காமவல்லி படர்ந்த கற்பகத் தருவாய் விளங்கும் கருணை வள்ளலே தேவரீர் இன்றெமக்கருளிய இந்தமணக்கோலத்துடன் இங்குஎன்றும் எழுந்தருளியிருக்கவேண்டும். இந்த அழகிய உம்முடைய மணக்கோலத்தை இந்தச் சித்திரை மாதம் சுக்கிலபட்ச சப்தமிகூடிய புண்ணிய காலத்திலும் ஏனைய புண்ணியகாலங்களிலும் எத்தினங்களிலாயினும் யாவராயினும் வந்து தரிசிக்கப்பெறுவரேல் அவர்கட்கு வேண்டிய வண்ணம் வரங்களை அருள்செய்து கிருபாமூர்த்தியாய் என்றும் எழுந்தருளி யிருப்பதே அடியேனுக்கு

அருளும் வரமாகும். என்று வேண்டிக்கொள்ள, கருணைக் கடலாகிய மணக்கோலப் பெருமான் "அவ்வண்ணமே அருள்பாலித்தோம்" என்றருளினர்.

பெரியோர்கள் தமக்கு ஒருநன்மை கிடைக்கப்பெறின் அதனைத் தன்போல் யாவரும் பெற்று இன்புறக் கருதுவர். உலகில் சிலர் தமக்குத் தகுதிவேண்டின், அதற்குத் தக்க துணைவரை அங்கங்களாகக்கொண்டு தகுதிபெற்றிலங்குவர். அஃது ஆயுதவெழுத்துப்போலும். வேறுசிலர் தமக்கு ஒரு பேறு கிடைக்கப்பெறின் தம்மினத்திறுதியிலுள்ளாரையும் பேணித் தழுவிக்கொள்வர். அதனால் அவரினத்தார் அனைவரும் உலகத்தாரால் போற்றப்பெறுவர். அது நகரம் போலும்; மற்றுஞ் சில உத்தமர்கள் தமக்கு ஒருசெயல் கிடைக்கப்பெறின் தம்மினத்தா ரனைவரையுந் தம்மோடு ஒப்பவைத்துக் கொள்ளப் பெறுவர். அது மொழிக்கு முதலில் வரும் அகர உயிர்போலாகும். அகத்திய முனிவரோ உத்தமோத்தமராதலால் தம்பொருட்டுத் தாயினு மினிய கருணைவாய்ந்த சிவபெருமான் அருளக் கிடைத்த மணக்கோல தரிசனத்தைத் தம்போலத்தரிசனஞ்செய்யும் அனைவருந் தரிசித்துப் பேறு பெறப் பெருமானை "இந்த மணக்கோலத்தோடு என்றும் இங்கு எழுந்தருளியிருந்து எமக்கருளியதுபோல அனைவருக்கும் அருள் பாலித்துக் கொண்டிருக்கவேண்டும்" என்றும் பிரார்த்தித்துக்கொண்டு முனிபுங்கவர் எம்பெருமான்றிருவருளை முன்னிட்டுச் சகல முனிகணங்கள் முதலிய யாவரும் புடைசூழ்ந்து போற்றி

வரத்தேவர்கள் பூமழை பொழிய, எல்லா வுபசாரங்களுடனும் தான்வீற்றிருக்கின்ற அகத்தியான் பள்ளியைச்சேர்ந்து தனதாச்சிரமத்தில் அருந்தவச் செல்வராய் அகமகிழ்வுற்று இனிது அமர்ந்தருளினார். மகரிஷிகளே! இந்தச்சரித்திரத்தை முற்றுஞ் சொல்வதென்றால் சிவபெருமானன்றி யார்தான் சொல்லப் பெறுவார். ஏதோ அவாமிகுதியால் அதனை யான் என் சிற்றறிவிற் கியன்றவாறுரைத்தேன், என்று நைமிசாரணிய வாசிகளுக்குச்சூதமுனிவர்சொல்லி யருளினார்.

திருமணக் கோலங்கண்ட வத்தியாயம் முற்றிற்று.

# அக்கினி தேவன் சாபம் நீங்கிய அத்தியாயம்

தவச் செல்வர்களாய்க் காமாதி முக்குற்றங்களையுங் கடிந்த நைமிசாரணிய வாசிகளைப் பார்த்து முனிபுங்கவ ராகிய சூதமுனிவர் சொல்லுவார். மகரிஷிகளே! அக்கினி தேவன் பிருகு முனிவரிட்ட சாபத்தை அகத்தியான் புள்ளியை யுற்று அகத்தீசப் பெருமான் திருவருளால் நீங்கப் பெற்ற சரித்திரத்தைச் சொல்லுகின்றேன். கேட் பீர்களாகவென்று சொல்லத் தொடங்கினர். அகத்திய முனிவர் ஆச்சிரமத்தில் விளங்கும் காட்சியை என்ன சொல்லுவேன். தவத்தாற்பொலிந்தொளிரும் திருமேனியும் மரவுரியுடுக்கையும் வலம்புரிச் சங்குபோலமுடித்த சடையு முடையர்களாய் தண்டு கமண்டலதாரிகளாய் விபூதி உருத் திராக்ஷமும்தரித்தும்நிறைந்தசாந்தகுணமும்சகலதத்துவங் களையுணர்ந்த ஞான ஐசுவரியமும் பேரொழுக்கமும் சத் திய வசனமும் பரிசுத்தமும் உடையராய்ச் செற்றம் நீங்கி ஓரறிவுயிர் முதல் யாவரிடத்தும் இரக்க முடைமையும் காலோய்ந்த நடையும் துன்பமெவற்றாலும் மனங்கலங்காது தலைவராகிய சிவபெருமானது திருவருளையே விரும்பி மலையிலும் வனத்திலுமே தங்கிக் கடும் பனிக்காலத்து நிறைந்த நீரினிடத்தும் வேனிற் காலத்தில் பஞ்சாக்கினி நடுவிலும் வீற்றிருந்து அருந்தவஞ் செய்யும் முனிபுங்கவர் கள் அகத்திய முனிவர் ஆச்சிரமத்தில் தவசித்தியைப் பெறுவாராய்ச்சமாதியில்அமர்ந்திருப்பவர்பலர். ஓமாக்கினி

சொலித்தெழும் குண்ட மத்தியில் வசிநட்டு அதன்மேல் ஒரு காலை யூன்றித் தவஞ்செய்பவர் பலர். ஒருகாலை மற்றொரு தொடையில் ஊன்றி நின்று அருந்தவஞ் செய்பவர் பலர். ஊர்த்துவ பாதமாகித் தலைகீழாய் நின்றருந் தவஞ் செய்பவர் பலர். யாகங்களை இயற்றுபவர் பலர். சகல சித்திப்பிரதமான சிவபூசையைச் செய்பவர் பலர். வேதாத்தியயனம்செய்பவர் பலர். இன்னும் ஆசாரியர்களைப் பூசிப்பவர்களும், சிவாகம பாராயணம் செய்பவர்களும், புராண படனம் செய்பவர்களும், ஆன்மலட்சணம் பேசி வாதித்து நிச்சயம்புகல்பவர்களும், பாசலட்சணஞ் சொல்பவர்களும், பதிநிச்சயம் பகர்பவர்களும், பதிலட்சணஞ் விளம்புபவர்களும் ஆசாரிய லட்சணஞ் சொல்பவர்களும், சிவக்ஷேத்திர வைபவஞ் சொல்பவர்களும், தீர்த்த விசேடம் உரைக்கின்றவர்களும், மூர்த்தி விசேஷம் நவில்பவர்களும், பாசதருமம் உரைப்பவரும் பசு தருமம் சொல்பவரும் பதிதருமம் எடுத்துரைப்பவரும், அடியார் பெருமை கூறுபவரும், அடியார் பூசை இயற்றுபவரும், சிவபூசைப்பெருமை யுரைப்பவர்களும், அவற்றைக் கேட்டு மகிழ்ந்து அவர்கள் சொற்படி ஒழுகும் மாணுக்கர்களும் அளவிலராய் வீற்றிருப்பதும் இன்னும் இன்னேரன்ன வாக்கினல் மனத்தால் கரசரணுதி அங்கங்களால் அரிய தவங்களை யியற்றும் முனிவர்குழாங்களின் காட்சி விளங்கும் அகத்தியான்பள்ளியில் அக்கினி தேவன் பேறு பெற்றதாவது:—

முன்னொரு காலத்தில் சொல்லொணாப் பெருமை வாய்ந்த வேதமே வடிவெடுத்து வந்தாற்போல விளங்கும் பிருகு முனிவர் ஆச்சிரமத்திற்குப் பாபத்திற்குச் சிறிதும் அஞ்சாத அதிபாதகனாகிய புலோமன் என்னும் அசுரன் வந்தான். வந்தவன் ஆச்சிரமத்தில் யாரையுங்காணாது அம் முனிவர்யாகசாலைக்கண் நுழைந்தான் அங்கிருந்ததிருப் பாற் கடலில் பிறந்த இலக்ஷுமியைப்பொத்த அழகுவாய்ந்த பிருகுமுனிவர் மனைவியாகிய பவுலோமியைக் கண்டான். அம்மங்கை கண்ட அசுரன் பவுலோமியை நோக்கி அழகிய கூந்தலையுடையபெண்மணியே! "நீயார் உன்னுடையநாயகன் யார்சொல்" என்றுகேட்டான். அப்பொழுதுசெவ்வரிபரந்த மதர்த்த கண்ணிணையுடைய பவுலோமி யென்னும் ரிஷிபத்தினியானவள் பயந்து யாதொரு பதிலுஞ் சொல்லாதிருந்தனள். அந்தப் பக்கத்திலிருந்த அக்கினி தேவனை நோக்கி மிகுந்த கோபத்தையுடையவனாகிய புலோமன் அக்கினியே! உலகத்தில் மணமகனும் மணமகளுமாயிருந்து இபற்றும் மணச் சாலைதோறும் சாட்சியாக வீற்றிருப்பவன் நீயன்றோ? ஆதலால் இவள் யாருடைய மனைவி சொல் என்று கேட்டான். கேட்டமாத்திரத்தில் அக்கினி தேவன் மனம் நடுங்கி என்செய்வோமெனக் கவலையுளாழ்ந்தான். இவ்வண்ணம் பயந்த அக்கினிதேவன் நாம்யாதொரு பதிலும் சொல்லாதிருந்தால் நீதியில்லாதகொடிய அசுரன் நம்மைத் துன்பமுறுத்துவான். இன்னதென் றுரைத்தால் அதனால் என்ன விளையுமோ தவசிரேஷ்டராகிய முனிபுங்கவர் நம்மீது சினங்கொண்டு சாபமிடுவாரே யென்று இரு

திறத்தாலும் தேராது மனங் கலங்கி உண்மையையே சொல்லுவோமென்று ஒருவாறு எண்ணினன். இவ்வாறு எண்ணி அக்கினி தேவன் புலோமனைப் பார்த்து இந்தப் பெண்மணி பிருகுமுனிவர் பத்தினியென்று சொன்னான். அதுகேட்ட புலோமன் கெண்டை மீன்போன்ற கண்களும் பச்சை மூங்கிலையொத்த மிருதுவாகிய தோளும், மணம் வீசுகின்றகூந்தலையுமுடைய பவுலோமியை நிறைந்தகருப்பவதியென்பதையும் சிறிதும் கருதாது வேகமாகச்சென்று அவள் கூந்தலைப்பிடித்து வெளியில் இழுத்தான். அப்பொழுது அவள் மனஞ் சகியாது பயந்து மனம்அழன்று வாய்விட்டலறி உயிரை யிழக்கும் தன்மையுடையளாய்த் துன்பமுற்றுச் சோர்ந்தாள்; தரையிற் கிடந்து புரண்டுஅழுதாள். இப்படித்தாய்படுந்துன் பத்தால்கருவிலிருந்த சிசு வயிற்றினின்றும் கீழே நழுவி விழுந்தது. ஆயினும் அந்தப் பாலகன் அரிய தவத்திற் சிறந்த பிருகு முனிவர் புத்திரன் ஆதலால் அக் குழந்தையின் திருமேனியிற் பொலிந்திலங்கும் தேஜசாகிற அக்கினி சொலித்து அதி பாதகனாய்ச் சமீபத்தில் நின்ற புலோமாசுரனுடைய சரீரத்தை நொய்ய பஞ்சுபோலச் சாம்பராகும்படி தகித்து அழித்தது. இவ்வண்ணம் புலோமன் சாம்பராய் மடிந்ததைப் பிருகு முனிவர் மனைவியாகிய பவுலோமிபார்த்தாள்; சோகந்தீர்ந்தாள்; அதிசயித்தாள்; பெருமகிழ்ச்சி கொண்டாள். தனது அருமைப்புதல்வனை வாரியெடுத்தாள்; உச்சிமோந்தாள்; முகத்தோடு முகம் அணைத்துத் தன்கணவராகிய முனிவர் பெருமான் எப்பொழுதுவருவார் எப்பொழுது காண்பேன் என்ற

தலையன்புடையவளாய் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். பராக்கிரமத்திற் சிறந்த மகாபாபியாகிய புலோமனை தவத்தாற் பிறந்த இளங் குழந்தையின் தேஜசாகிற அக்கினி சாம்பராகும்படி அழித்தால் தவத்தின் பெருமையை என்னசொல்வது "ஒன்னார்த் தெறலும் உவந்தாரை யாக்கலும் எண்ணிற் றவத்தால் வரும்" என்பதை அறிவுறுத்தியது.

இஃது இங்ஙனமாகப் பிருகு முனிவர் சென்றிபற்றிய யாகத்தை முடித்து அவபிருதமும் முடித்துத் தனதாச்சிரமத்திற்குவந்தார். அந்தத் துன்பத்தினுல் வருந்தியமனைவி முகத்தைப்பார்த்தார். ஈண்டு யாது உற்றது என்று ஆலோசித்து நடந்த விருத்தாந்தங்க ளனைத்தையும் சமாதியராகிய முனிவர் ஞான நோக்கினுலுணர்ந்து மிகுந்த கோபங் கொண்டு அக்கினியை நோக்கி இந்தக் கொடுந்துன்பம் விளையப் பார்த்துக் கொண்டிருந்த நீ தடைசெய்யாததால் நன்று, தீது யென்று எப்பொருளையும் விகற்பங் கொள்ளாது நேர்ந்த எல்லாவற்றையும் நீ யுணவாக வுண்ணக் கடவாயென்று கொடிய சாபமிட்டார். அதுகேட்ட அக்கினிதேவன் கோபங்கொண்டு எனது தன்மையையுணராது முனிவர் சாபமிட்டதால் நான் உலகத்திற்கு உபகரிக்கும் ஒளியையும் உபகரிக்கிறதில்லை. அன்றியும்யாம் எந்த இடத்திற்கும் செல்வதுமில்லை யென்று தனதிருக்கையிலேயே இருந்துவிட்டான். உலகத்திற்கு ஒளியை உதவும் சூரியன் சந்திரன், அக்கினி, என்னும் மூவரில் அக்கினிதேவன்

தான் ஓர் உதவியும் செய்கிறதில்லை யென்று தனதிருக் கையிலமர்ந்து விட்டானானால் உலகம் என்னசெய்யும். எந்த விடத்திலும் யாரேனினும் அனல் மூட்டினால் அது சொலித்தெழுவதும் இல்லை. தோன்றுவதுமில்லை. அதனால் ஒன்றைப் பாகஞ்செய்பவும் யாகஞ்செய்பவுங் கிடையாது. அனைவருந் துன்பமுற்றார்கள். தேவர்களும் அவியுணவின்றி வருந்தினார்கள். இவ்வண்ணம் வருந்திய தேவர்களனைவ ரும் சத்தியலோகத்திற்குச் சென்று பிரமதேவரிடத்தில் முறையிட்டார்கள். பிரமதேவர் அதுகேட்டு மனமிரங்கி அக்கினியை அழைத்து இனியபலவார்த்தைபால் நயமாகச் சொல்லிப் பரிசுத்தனாகிய அக்கினி தேவனே! நீசெய் யும் உதவியாலல்லவா உலகம் இன்புற்று வாழ்கின்றது. சூரியன் சந்திரன் அக்கினி யென்னும் மூவரும் ஒளியை உதவுவதானாலும் சூரியசந்திரரின் ஒளி செல்லாதவிடங்க ளிலும் பகற்காலத்திலும் இராக்காலத்திலும் எந்த விடங்க ளில் வேண்டுமானாலும் அவ்வவ்விடங்களி லெல்லாம் விரும்பியவண்ணம் ஒளியை உதவுவதும் உணவுப்பொருளை வேகவைத்துக் கொடுப்பதும் அன்றி இன்னும் பல உதவி களைச் செய்தும் தேவர்களுக்கு அர்ப்பணமாகும் யாகங்க ளும் நிறைவேற வேண்டியதும் உன்னாலன்றோ? எல்லா முணர்ந்த அறிவிற் சிறந்த அக்கினியே! உனக்குச் சொல்ல வும் வேண்டுமோ வென்றுரைத்து இன்னமுஞ் சொல்லு வார்: அக்கினி தேவனே! இனி யார் எந்த யாகஞ் செய்தா லும் அப்படிச் செய்யும் யாகந்தோறும் உனக்கு அவிர்ப் பாகம் கொடுக்கப்படும். அதனை நீ ஏற்றுக்கொள்வாயாக

என்று அருள்செய்து இனியுலகத்தில் தொன்மைபோல் நீ இயற்றும் உதவிகளைப் புரிந்து விளங்குவாயாக" என்று கூறியருளி இன்னமும் அக்கினியை நோக்கிப் பிருகு முனிவரால் உனக்கு இட்டசாபம் நீங்குமாறு பூலோகத்திலே விளங்கும் வேதவனத்தை அடைந்து சதுர்வேதங்களும் மூழ்கிப் பேறுபெற்ற வேதநதியென்னும் புண்ணிய தீர்த்தத்தையுற்று அன்புடன் அத்தீர்த்தத்தில் ஆடி மகரந்தம் பொருந்தி மணங்கமழும் மலர்களைச் சூடிய ஜடாமகுடம் விளங்கப் பெற்ற சிவபெருமானைப் பூசித்து வணங்குவாயாக. அதனால் உனக்கிட்ட சாபம் நீங்கிவிடும் என்று அருள்செய்தார். அதுகேட்ட அக்கினிதேவன் பிரமதேவனிடத்தில்விடைபெற்றுக்கொண்டு வேதவனத்தையடைந்து அகத்தியேசப் பெருமான் சன்னிதியில் சிறந்து விளங்கும் வேதநதியென்னுஞ்சமுத்திரதீர்த்தத்தையுற்று அன்புடன் அத்தீர்த்தத்திலாடி அதன்கரையில் தன்பேரால் சிவலிங்கம் தாபித்து விதிப்படி பூசித்தான். இத்தகைய அருந்தவமியற்றி அக்கினி தேவன் அகத்தியான்பள்ளியில் எழுந்தருளியிருக்கும் அந்தி வண்ணநாதர் என்னும் அகத்தீசப்பெருமானை ஒவ்வொரு நாளுந் தரிசித்து துதிப்பானாயினான்.

* அகத்தியான் பள்ளிமேய வடிகளதடிசேளின்பம்
புகத்தியானித்துப் போற்றிப் புனிதநிற் போற்றமும்பர்
முகத்தியான் சாபம் நீங்கி முழுதினுந் தூயனாய்
வுகத்தியானிமலவென்றே உநதளத் தோடுஞ் சொல்வான்.

---

* வேதாரணிய புராணத்திலுள்ளது,

என்று அகத்தியேசப்பெருமானே! மலரகிதராய்எக்காலத்தும் பரிசுத்தராய் விளங்கும் தேவாதி தேவனுகிய சிவ பெருமானே இன்பார்ந்து வாழ உன்னை இடைவிடாது துதிக்கின்ற தேவருடைய சமீபத்தில் அடியேன் சாபம் நீங்கிப் பரிசுத்தனுய்ச் சென்று மகிழத் திருவருள் பாலிக்க வேண்டு என்று மனமுருகி வேண்டுவானுனன். இன்ன மும்பிரமாதிதேவரும் அறிதற்கரிய கருணைவள்ளலே!நான் ஈண்டு ஆடிய தீர்த்தத்திற்கு அக்கினி தீர்த்தம் என்று பெயர் மல்கவும், இத்தீர்த்தத்தில் யாரேனும் அன்புடனுடி என்னுற்பூசிக்கப்பெற்ற, அக்கினிதீர்த்தத்தினருகில் எழுந்தருளியிருக்கும் மூர்த்தியையும்பூசித்துஉம்மையும் வழிபடுவாரேல் அவர்கள் எத்தகைய கொடிய பாப சாபங்களையுடையவர்ானுலும் அவைகளனைத்தையும் போக்கி அவர்களுக்கு வேண்டிய வரங்களையும் அருளல்வேண்டும் என்று வேண்டிக்கொண்டான். இவ்வண்ணம் வேண்டிக் கொண்ட அக்கினி தேவனுக்கு அவன் வேண்டியவாறே அகத்தீசப்பெருமான் அருள்பாலித்து அமர்ந்தார்.

அக்கினி தேவன் எம்பெருமான் அருளிய வண்ணந் திருவருட்பேறு பெற்றுப் பெருமகிழ்ச்சி யுடையனுய்ச் சுவர்க்கலோகத்தையடைந்து தேவர்கள் எல்லாம்புகழ்ந்து கொண்டாடும் படிக்குச் சிறந்து விளங்கித் தனதிருக்கையின்கண்ணே உலோகோபகாரமாய்த் தொன்மைபோல யாவருக்கும் உதவிகளைச் செய்து விற்றிருந்தான். என்று சூதமுனிவர் உரைத்து, அந்த அக்கினி தீர்த்தத்தில் ஆடிப்

பூசிப்போரும், அக்கினிதேவன் சாபம்நீங்கி அருள்பெற்ற சரித்திரத்தைக் கேட்போரும், கேட்டுவைப்பவரும் ஆகிய யாவரும் அவர்களியற்றியபாவங்களெல்லாம்நீங்கப்பெற்று அபீஷ்ட சித்தியையும் பெற்று வாழ்வார்கள். இப்படிப் பேறு பெற்றவர்கள் எண்ணிலராகும் என்றும் சொல்லியருளினர்.

அக்கினிதேவன் சாபம் நீங்கிய வத்தியாயம் முற்றிற்று.

## அத்திரிமுனிவர் பேறுபெற்ற வத்தியாயம்

புதியவமுதம் போல் இனிய சுவை வாய்ந்த வசனாமிர்தத்தைப் பொழியும் சூதமுனிவரே! அத்திரி முனிவர் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில்களையும் இயற்றுந்தலைவராகிய பிரமன், திருமால், உருத்திரன் என்னும் மூவரையும் புதல்வராகப் பெறுதற்கு இயற்றிய தவத்தின் முறைமையைச் சொல்லியருள வேண்டுமென்று நைமிசாரணிய வாசிகள் கேட்கச் சூத முனிவர் சொல்லுவாராயினர். தவசிரேஷ்டராகிய முனிவர்களே! கேட்பீர்களாக முன்னொரு காலத்தில் பிரமதேவரது புத்திரனாகிய தக்கன் தானியற்றிய தவவலியால் பிரம தேவர் அருளைக் கொண்டு உயிர்த்தொகைகளைப் படைத்துச் சிறு விதியெனப் பெயர் பெற்றுத் தருக்குற்றான். சாதாரணமான உயிர்த் தொகைகளைப் படைத்தன்றோ தருக்குற்றான் தக்கன், என்ற வியப்பு நீங்க, அத்திரி முனிவர் உலககாரண மூர்த்திகளாகிய மும்மூர்த்திகளையும் புதல்வராகப் பெறுவதே வியப்பாகுமென்று உள்ளத்தில் நினைந்தார். நினைந்த வண்ணங் கூட்டிவைப்பது அகத்தியான் பள்ளியாகும் எனக்கருதி வேதாரணியத்திலே, அன்னப்பறவைகள் தங்கியிருக்கும் தாமரைத் தடாகங்களாற் சூழப்பெற்ற அவ்வகத்தியான்பள்ளியையுற்று அருந்தவஞ் செய்தே பெறுவது தகுதியாகுமென்று ஆய்ந்து தேர்ந்தார். இவ்வண்ணந் தேர்ந்தமுனிவர் அடைந்தார்க்குத் தீவினையை

நீக்கி யருட்கனி பயக்கும் உத்தம க்ஷேத்திரமாகிய வேத வனத்தை யடைந்து, அங்கு விளங்குஞ் சிறப்புக்களையெல் லாங்கண்டுகளிப்புற்று இத்தலமன்றோ முத்தித்தலமாகும்.

நாடுற்ற தோர் செல்வமி நகருறு பானற் சங்கழலார்
மாடுற்ற மனையுற்று மைந்தரோடு வதியமறைக்
காடுற்றதா லிஃதுபாரறியா ரிந்தக் காசினியில்
வீடுற்று வாழ முன் வேண்டினர் வேதவனத்தவரே.

என்று வியந்து திருவருட்பேறுப் விளங்கும் அத் தலத்தில் இயற்றும் பிரம யாத்திரை விட்டுணு யாத்திரை, அந்தர்க் கிரகயாத்திரை, சேதுயாத்திரை, தக்கிணமானச யாத்திரை உத்தரமானசயாத்திரை ஆகிய ஆறு யாத்திரை களையும் இயற்றி வேதவனேசப்பெருமானைத் தரிசித்துக் கொண்டு தவசித்தியை யுதவும் அகத்திய முனிவர் வீற்றி ருக்கின்ற அகத்தியான் பள்ளியை யடைந்து அங்குத் தவ சிரேஷ்டர்களாகிய முனிவர்களியற்றுந் தவத்தின் சிறப்புக் களையும், அவர்கள் தவக்கோலங்களையுங் கண்டு வியப் படைந்து பரிசுத்தமாகிய உள்ளங் கசிந்துருகிக் காதன் மீக் கூரக் களித்து இத் தலமே மேன்மையாகிய தவஞ் செய்வ தற்கும், தவப்பயனாகிய யெத்தகைய வரத்தையும் பெறுவ தற்கும் உரியதாகும். ஏனைய தலங்களெல்லாம் இதற் கொப்பாகா. இதுவே தகுதியுடையது என்று அக மகிழ்ச்சி யுடையரானார்.

பின்னர் அத்திரி முனிவர் அகத்தியேசப் பெருமா னுக்கு மேற்கே நூறு விற்கடை தூரத்தில் ஆடினோர்க்

கரும்பபனளிக்கும் புண்ணிய தீர்த்தமொன்றை யமைத்துத் தன்பெயரால் சிவலிங்கமும் தாபித்து முனிவர்பெருந்தகை மூன்று காலங்களிலுங் தம்மால் இயற்றிய அத்திரி தீர்த்தத்திலாடி அத்திரிலிங்கத்தையும் அகத்தியேசப் பெருமானையும் அன்புடன் விதிப்படி பூசித்து வணங்கித் துதித்து வலம் வந்து ஆராவன்பு மீதெழ மனத் தகத்தே பெருமானைச் சிந்தித்து, அகத்தியேசர் சன்னிதியில் இயற்றவரிதாய அருந்தவ மியற்றி யமர்ந்தார். இவ்வண்ணம் ஒவ்வொரு நாளிலுஞ்செய்யும் நியமங்களை யன்புடனியற்றி அகத்தியேசப் பெருமானை விடாத புணையாகப் பற்றி மெய் வருத்தம் பாராது எம்பெருமான் எப்பொழுது காட்சிதந் தருளுவாரோ வென வருந்தி அரிய தவமியற்றினர்.

காமாதி குற்றங்களெல்லாம் ஒழித்து ஞானச்செல்வராய் விளங்கும் அத்திரி முனிவருக் கருள்செய்ய உலகத்தில் இனிய தமிழைப் பரவச்செய்த அகத்திய முனிவர் பூசித்த அகத்தியேசப் பெருமான் கருணை கூர்ந்து, வேகத்தையுடைய ஒப்பில்லாது பெருமை வாய்ந்த வெள்ளிய இடப வாகனத்தின் மீது ஆரோகணித்து இடப்புறத்தில் உமாதேவியார் விளங்க வுதயகிரியில் அனேகாயிர சூரியர்கள் கிரணங்களை வீசி ஏக காலத்திற் றோன்றினுலும் ஒப்பாகாதென்று சொல்லும்படியாய்த் தேஜோன் மயமான ஒளியை யுடையராய்ச் சோம சூரியாக்கினி யென்னும் மூன்றுகண்களும் காளகண்டமும் விளங்கக் கங்கையுஞ்சந்திரனுஞ் சர்ப்பமும் தரித்துவிளங்குஞ் சடாமுடியும் மான்,

மழு, வாதம், அபயம் விளங்கும் கரங்கள் நான்கும் ஆகிய திருக்கோலத்தோடும் சகல ஆடம்பர கோஷங்களுடனும் அரமுழக்கமும் சகல கணங்களும் முழங்கத் தேவர்கள் மலர்மழைபொழியப் பஞ்ச துந்துபிவாத்தியங்கள் முழங்க இன்னோரன்ன பற்பலவைபவ அத்தியற்புதங்கள் விளங்கக் கருணையங்கடலாகிய அகத்தியேசப் பெருமான் பிரசன்னராகிக் காட்சி தந்தருளினார். தவசிரேஷ்டராகிய அத்திரி முனிவர், பெருமான் அருளிய திருக்கோலத்தைத்தரிசித்து மனம் நெக்கு நெக்குருகித் தன் வசமின்றி ஆனந்த பரவசராய்ச் சரீரம் புளகாங்கிதங்கொண்டு ஆனந்தக் கண்ணீர் வாரப்பூமியில் தண்டாகாரமாய் வீழ்ந்து அளவிலாப் பெருமகிழ்ச்சி யுடையராய்ப் பலதுதி மொழிகளால் துதித்து நின்றார்.

இவ்வண்ணந் துதித்து நிற்கும் அத்திரிமுனிவரை நோக்கி, எம்பெருமான் திருவாய் மலர்ந்தருளுவார். "அத்திரியே! நீ நியமமாய் அன்புடனியற்றிய வருந்தவத்தால் களிப்புற்றோம், ஆதலால் நீ விரும்பிய வரம் யாது அருளுவோம் உரை" எனவருள முனிவர்மீண்டும் பணிந்து அன்புடன் பலதுதி மொழிகளாற் றுதித்து வேண்டுவாரானார். அளவிலாப் பெருங்கருணைக் கடலே! அகத்தியேசா! அடியேனுக்குப் பிரமன் திருமால், உருத்திரன் ஆகிய மூவரும் என் மகவாய் வர அருள் பாலிக்கவேண்டும். அஃதன்றியும் இங்கு அடியேனியற்றிய தீர்த்தத்திலாடி மூர்த்தியைப் பூசித்து வழிபட்டார் யாரெனினும் அவர்கள் எத்தகைய

பாவங்களை யிபற்றினராயினும் அப் பாவங்களை யெல்லா மொழித்து அவர்களுக்கு இம்மையில் சகல ஐசுவரியங்களையும் போகங்களையும் இன்னும் வேண்டிய வரங்களையும் அருளி மேலும் முத்தியுமருள வேண்டுமென்றுபிரார்த்தித்தார். இவ்வண்ணம் பிரார்த்தித்த மாத்திரத்தில் கருணை வள்ளலாய் விளங்குஞ் சிவபெருமான் அவ்வண்ணமே அருள்பாலித்து அருட்பெருக் குடையராய் அகத்தியலிங்கத்தில் அமர்ந்தருளினர்.

அத்திரி முனிவரும் தாம்வேண்டியவாறே திருவருளை எப்பெருமான் அருளப்பெற்று அளவில்லா மகிழ்ச்சி கொண்டு அகத்தியேசப் பெருமான் திருவடியை வணங்கி விடைபெற்றுக்கொண்டு தனதாச்சிரமத்திற்குச் சென்று தம் தர்ம பத்தினியாகிய அனசூயையுடன் அமர்ந்திருந்தார். அது போது ஒருநாள், அனசூயையினிடத்துக் கருப்பவாசஞ் செய்யாது, பிறத்தலா லுண்டாகும் துர்வாசமின்றி அவளது புஷ்பாஞ்சலியினின்றும் சிவாம்சம் ஓர் குழந்தை வடிவாகிக் கீழே குதித்து விளையாடினமை பின் அக் குழந்தைக்குத் துர்வாசரென்னும் காரணப்பெயருளதாயிற்று. பின்னர், திருமாலம்சம் தத்தாத்திரயராய்த் தோன்றினர். அத்திரி முனிவர் நேத்திரத்தில் தாமரையாசனராகிய பிரமதேவர் சந்திரனாய்ப் பிறந்தார். இவ்வண்ணம் பிரமன், திருமால், உருத்திரன் ஆகிய மூவரும் தம் வழித்தோன்றலாகப் பெற்ற அத்திரி முனிவர், தேன் றுளிக்குஞ் சோலைகள் சூழ்ந்த அகத்தியான்பள்ளிமேவ

அகத்திஸ்வசப் பெருமான் திருவருளை நினைந்து வியந்து களிப்புற் றயர்ந்தாரென்று நைமிசாரணிய வாசிகளாகிய மகரிஷிகளைப் பார்த்துச் சூதமுனிவர் சொல்லி யின்னமுஞ் சொல்லுவார். அத்திரி முனிவர் அரிய தவஞ்செய்து பெற்ற புதல்வராகிய துர்வாசர், தத்தாத்திரயர், என்னும் முனிவர்கள் அகத்தியான்பள்ளி மேன்மையை யுணர்ந்து அத்தலத்தையுற்று அத்திரி தீர்த்தத்திற் படிந்து அத்திரி லிங்கத்தைப் பூசித்து வழிபட்டு அகத்திஸ்வசப் பெருமானையுந் தரிசித்து மனங்கசிந்துருகி அன்புமிக்குடையராய் வணங்கித் துதித்தார்கள். இவ்வண்ணம் பலநாள் நியமமாயியற்றற்கரிய அருந்தவஞ்செய்து எப்பெருமான் திருவருளால் துர்வாசர் தத்தாத்திரயர் ஆகிய இருவரும்யோக சித்தியைப் பெற்றார்கள். அன்றியுந் தவத்தாற் சிறந்த கண்ணுவரென்னும் முனிவர் யார் யார் என்ன விரும்பித் தவஞ்செய்தாலும் அதனை அனுபோகே உதவும்பெருமை வாய்ந்த அகத்தியான்பள்ளியைச் சேர்ந்து அத்திரி தீர்த்தத்திலும் அக்கினி புட்கரணியிலுமாடித் தாப்பூசிப்பதற்கு சிவலிங்கப் பெருமானைத் தாபித்துப் பூசைசெய்து தமிழ் மொழிக்குத் தலைவராய் விளங்கும் அகத்திஸ்வசப் பெருமானையும் பூசித்து வணங்கிப் பலநாளங்கமர்ந்து அருந்தவமியற்றி யாவராலும் புகழ்ந்து கொண்டாடப்படும் தவச் செல்வத்தையுடைய முனிவர்குழாத்துள் மேன்மையுடைய முனிசிரேஷ்டராய் விளங்கினார். முனிவர்களே யென்று சொல்லிய சூதமுனிவர் அம்முனிவர்களை நோக்கிச் சொல்லுவார். முனிவர்களே எத்தகைய வரத்தை வேண்டி

னொருப் தவஞ் செய்தற்கு அகத்தியான்பள்ளியைப்போல் சித்த சுத்தியைத்தரும் தலமுமில்லை. அகம் புறமென்ற விரண்டும் தூய்மையுறச் செய்தலில் தீர்த்தங்களிற் சிறந்த அத்திரி தீர்த்தம், அக்கினி புட்கரணிபோல் தீர்த்தமுமில்லை. அகத்தியேசப் பெருமானைப்போல் அருள்பாலிக்கும் மூர்த்தியுமில்லை. ஆதலால் அவற்றின் பெருமையை யான் என்ன சொல்லுவேன் என்று வுரைத்து மனங்கசிந்துருகி யன்பினால்ஆனந்தவருவி கண்களினின்றுஞ் சொரிய அர, சிவ, சம்போ வென்று அரனாமத்தை முழக்கஞ்செய்து தங் கரஞ் சிறமேற் குவித்து ஆனந்த பரிதரானார். நைமிசாரணியவாசிகளும் உள்ளம் நெக்கு நெக்குருகிப் புளகாங்கிதராய்ச் சிவநாமங்களை யுச்சரித்து அகத்தியேசப்பெருமான்றிருவருளை நினைந்து புகழ்ந்து பரவசரானார்கள்.

அத்திரி முனிவர் பேறுபெற்ற வத்தியாயம் முற்றிற்று.

# யம தருமராசன் சீவன்முத்தித் திறம்பெற்ற அத்தியாயம்

தவசிரேஷ்டர்களாகிய நைமிசாரணிய வாசிகளைப் பார்த்துச் சூதமுனிவர், தருமராசன் சீவன்முத்தித் திறம் பெற்ற சரித்திரத்தைச் சொல்லுவாராயினர். கருதருந் தவத்திற் சிறந்த முனிவர்களே! முன்னொரு காலத்தில் தென்றிசைக்கு அதிபதியாகிய யமதருமராசன் சமனைவழி யென்னும் பட்டணத்தில் ஆதிபத்தியஞ் செய்யுங் கொலு மண்டபத்தில் வீற்றிருந்தார். உலகத்தில் சாலம் முடிந்தவர்களை யமதூதர்கள் ஒவ்வொரு நாளுங் கொண்டு வந்துய்ப்ப யமசன்னிதானத்தில் வீற்றிருக்கும் சித்திரபுத்திரானவர், தூதர்களாற் கொண்டு வரப்பட்ட ஒவ்வொரு வரும் அவரவர்கள் மனத்தினால், வாக்கால், காயத்தால் உடன் சேர்க்கையால், தாங்கள் உணர்ந்தும் உணராமலும் இயற்றிய பாப புண்ணியங்களைக் கணக்கிட்டுரைப்பார். அவர்களுக்குத் தக்க நரக சுவர்க்கங்களை அனுபவிக்க உத்தரவுசெய்யுந்தருமராசன்பாபிகள்ஒவ்வொருவரையும்நோக்கிக் கருணையோடும் மனமிரங்கி "எத்தனையோ காலமாய்ப் பிறந்திறந்து துன்புற்ற உனக்கு இன்னமுந் தீமையின்றி நன்மையைப் பெற நல்லறிவு தோன்றவில்லையா" என்று இனிமையாய்ச் சொல்லிப்பின்பு அவரவர் வினைக்குத் தக்க வாறு இன்பதுன்பங்களை அநுபவிக்கும்படி கட்டளையிடுவார். அதாவது கொலைப் பாவங்களைச்செய்தவர் எண்ணில்

லாத காலம் கொடிய மகா ரௌரவம் என்னும் நரகத்தில் துன்பத்தை யனுபவித்து வருந்திப் பின்பு பூமியிலே பிறப்பில் ஈனமான ஜந்துக்களாய்ப் பிறந்துழன்று, அதன்பிறகு மனிதப் பிறப்பை யடைந்து ஈளை, காசம், குட்டம், பெருவியாதி, நெருப்புக் காய்ச்சல், பெரும்பிளவை முதலிய நோயினால் வருந்தி யுழலுவார்கள். தாமே உயிர்க்கொலை செய்து கொண்டவர் கும்பிபாகமென்னும் நரகத்தில் அறுபதினாயிர வருடகாலம் அமிழ்ந்தித் துன்புற்றுப் பின்பு சக்கரவாளகிரிக் கப்புறத்திலே யுள்ள இருட் பூமியிலே எண்ணில்லாதகாலம்கிடந்து துன்பத்தால் வருந்துவார்கள். புலாலுண்டவர் நரகத்தில் நெடுங்காலங்கிடந்து கொடிய மிருகங்கள் தம்மைக்கடித்துத் தின்ன வருந்திப் பின்பு பூமியிற் பிறந்து பன்றி, காக்கைமுதலிய இழிந்த பிறப்புக்களை யடைந்து உழன்று, பின்பு மனிதப் பிறப்பை யடைந்து பெருவியாதி, கருங்குட்டம், வெண்குட்டம், நீரிழிவு, கண்டமாலை முதலிய நோயினால் வருந்துவார்கள். கள்ளுண்டவர் அனேககோடிகாலம் நரகங்களிலுழன்று, அவருடைய நாக்கை யமதூதர்கள் வாளினாலே சேதித்தும் உலோகங்கள் உருக்கிய நீரை அவர்களுடைய வாயிலே வார்த்தும் வருத்த வருந்தியும் பின்பு பூமியில் மலப் புழுவாய்ப் பிறந்துழன்றும் மீண்டும் மனிதப் பிறப்பாய்ப் பிறந்து சொத்தைப் பல்லுக்குத்து நோயினாலும், பைத்தியத்தினாலும், வயிற்றுநோயினாலும், வருந்துவார்கள். களவுசெய்தவர்களை யமதூதர்கள் அவர்கள் அவையவங்களெங்கும் இருப்புமுளைகளை யறைந்து பாசத்தினாலே சரீரத்தைச் சேர்த்துக்

கட்டிச்சுவாலிக்கின்ற அக்கினி நரகத்திலே குப்புறப்போட்டழுத்துவார்கள். அப்படியிருக்க, அதன் பின்பு அவர்கள் மனிதராய்ப்பிறந்து வாதம்மூலரோகம் முதலியநோயினல் வருந்துவார்கள். வியபிசாரஞ்செய்தவர்களை யமதூதர்கள் இருப்புக்குடத்தினுள்ளே புகுத்தி அதன்வாயையடைத்து அக்கினிமேல் வைத்து எரித்தும், அவர் சரீரத்தை உரலிலிட்டு இடித்தும், அக்கினி மயமாகிய சிலையிலே சிதறும்படி அறைந்தும், இருட் கிணற்றிலே வீழ்த்தியும், அங்கே இரத்தவெள்ளம் பெருகும்படி கிருமிகள் அவருடம்பைக் குடையும்படிசெய்தும் அக்கினிநரகத்தில்'என்செய்தோம்' 'என்செய்தோம்'என்றுகதறி அழுங்கச்செய்வார்கள். பொய் சொன்னவரும் பொய்ச்சாட்சிசொன்னவரும், பொய்வழக்குப் பேசுவோரும், நடுவு நிலைமையின்றி வழக்குத்தீர்த்துவிட்டவருமாகிய இவர்கள்ஏழுபிறப்புக்களிலுஞ்செய்தபுண்ணியங்களை யிழந்து மிகக்கொடிய ரௌரவமுதலிய நரகங்களில் நெடுங்காலங் கிடந்துழலுவர். பின்னும், அவர்களை யமதூதர்கள் வாயிலே யடித்தும், நாக்கைச்சேதித்தும் பல துன்பங்களை நெடுங்காலம் அனுபவிக்கச் செய்வார்கள். மீண்டும் அப்பாவிகள் பூமியிலே ஊர்ப்பன்றி,நாய்,கழுதை, நீர்க்காக்கை, புழுமுதலிய இழிந்த பிறப்புக்களாய்ப்பிறந்துழன்றும் பின்புமனிதப்பிறப்பையடைந்து பிறவிக்குருடாகியும், செவிடாகியும் துன்புற்று, குட்டரோகத்தினலும் வாய்ப்புண்ணினலும் வருந்திஊமைகளாயும்பிறந்துழலுவர். ஆசாரியரையேனும், சிவனையேனும்நிந்தித்தவர்களும், தாம் கொண்டவிரதநியமஅனுட்டானங்களைவிட்டவர்களும், கற்ப

கோடிகாலம்ரௌரவமாதிய நரகங்களில்வீழ்ந்துஉழலுவார்கள். தாய்தந்தையர்களை நிந்தைசெய்தவர்களும், அவர்களை அலட்சியஞ்செய்து சொற்கடந்தவர்களுங் கும்பிபாகமென்னும் நரகத்தில்வீழ்ந்து நெடுங்காலந்துன்புறுவார்கள். பசித்துற்றவர்களை உண்ணுதிருக்கும்படி தடுத்த கொடிய பாபிகளைத் தண்டஞ்செய்வோராகிய யமதூதர்கள் அவைபவங்களைக் கண்டதுண்டங்களாகத் துணிக்கும் வாளாயுதங்கள் நிரைத்த நரகத்தில் தள்ளி வருத்துவார்கள். வறிஞர், நோயாளர், வழிநடந்து வந்தோர் ஆகிய இவர்கள் பசியால் வாய்விட்டுக் கேட்டும் சிறிதுணவும் உதவாத தீயோர்களை உற்கடமென்னும் நரகத்தில் நெடுங்காலங் கிடத்தித் துன்புறச் செய்வார்கள். செம்பொன் ஆசையால் ஓரவழக்குச் சொன்னவரைச் சங்கடமென்னுங் கொடிய நரகத்தில் நெடுங்காலங்கிடந்து வருந்தும்படி செய்வார்கள். பெரியோர்களையும், அடியார்களையும் அபவாதம்பேசி நிந்தித்தவர்கள் காடாக்கினியாகச்சொலித்துஎரிகின்ற வாலுகநிரயமென்னும் நரகத்தில் நெடுங்காலங்கிடந்து வருந்துவார்கள். குற்றமில்லாதகன்னியரைத்தூறுசொன்னவர்கள் தைலகும்பமென்னும் நரகத்தில் விழுந்து அழுங்குவார்கள். ஒருவருக்கு உணவை ஈந்து அவர் உண்ணும்போதுமனம்வருந்த நிந்தைசெய்தவர் தீக்கடை நரகத்தில் விழுந்து வருந்துவார்கள். அந்தணர், கற்றோர், மூத்தோர், அடியார்கள், பசுக்கள், ஈன்றோர் ஆகிய இவர்கள் துன்பமுற, அதனை நீக்கி அவர்களைப்பேணுதவர்கள் மாகடமென்னும் நரகத்தில்விழுந்துவருந்துவார்கள். அன்னியர்பொருளைக்கவர்ந்தோர், அன்

ணியரை வஞ்சித்துப் பொருள் சேர்த்தவர், பொருளைவைத்துக்கொண்டு தருமஞ்செய்யாதவர் ஆகிய இவர்கள்கொடிய நரகத்தில் விழுந்து நெடுங்காலம் வருந்திப் பின்பு பூமியிற் பிறந்து, தரித்திரராயும் குன்மம் முதலிய நோயுடையவர்களாகியும் வருந்துவார்கள். அன்றியுந் தங்களுக்குள்ள பொருளை, அக்கினி, சோரர், பகைவர் முதலியவர்கள் அழிக்கப் பார்த்து யாதொரு வலியுமின்றி ஏமாந்து சோகமுறுவார்கள். இன்னும் பாவங்களென்றிசைத்த யாவுமியற்றியவர்கள், ஏற்ற நரகாதி துன்பங்களை அடைந்து வருந்துவார்கள். கொடிய பாவத்தைச்செய்து நரகத்தை யடைவோர் செல்லும் மார்க்கம் பெரியபள்ளமும் உன்னதமான மேடும் முட்கள் நிறைந்த காடும் அக்கினிமயமாய் வெதுப்பும் ஓடைகளுமாயிருக்கும். அன்றியும் அப்பாதை ஒருபுறஞ் சரிவுடையதாயுந் துட்டமிருகங்கள் தங்கியிருக்கு மிடமாயும்வெப்பமாகிய மணற்பரப்பும்பருக்கைக்கற்களும் நிறைந்ததாயும் பாம்பு, தேள் முதலியவிஷஜந்துக்கள் சஞ்சரிக்கு மிடமாயும் இருக்கும்.

புண்ணியங்களைச் செய்தவர் செல்லும் வழி மணமுங் குளிர்ச்சியுமுள்ள பெரியசோலைகள் நெருங்கியும் அன்னசாலைகளும், தண்ணீர்ப் பந்தல்களும், பூக்கள் நிறைந்த குளிர்ந்த வாவிகளும் அழகிய அனேக மாளிகைகளும் பக்கங்களெங்கும் நெருங்கி அமைந்தும் விமானங்களுஞ் சிவிகையாதி வாகனங்களும் மற்றும் பலவித உபசாரங்களும் விளங்கும். தருமராசன் அவர்களை முகமலர்ச்சி

யோடு மினிய வார்த்தைகளால் உபசாரஞ் சொல்லி விமானங்களி லேற்றிச் சுவர்க்காதி புவனங்களில் இன்புறச்செய்வார்.

எவ்விதத் துன்பங்களுமின்றி வேண்டியவாறே இன்பமே அனுபவிக்க விரும்புவோர் சத்தியவசனமே சொல்லல் வேண்டும் ஆன்மாக்களிடத்தில் இரக்கமுடைமையும் இனிய வார்த்தையையுமே பேசல் வேண்டும். தம்மாலியன்றவரை பரோபகாரமே செய்தல் வேண்டும். இன்னமும் தாய் தந்தையரைப் பேணி நடத்தலும், ஆசிரியர், அறிவிற்சிறந்தபெரியோர், சிவனடியார்கள் ஆகியஇவர்கள்வரக்காணில் அவர்கள் மகிழும்படி வணங்கி இனியனசெய்தலும், நீதிகளைவழுவாது இயற்றலும் வேண்டும். அன்றியும்; அன்புடன் தன்னாலியன்றதருமஞ்செய்தலும் தடாகங்கள் உண்டுபண்ணி வைத்தலும், கேணிகட்டி வைத்தலும், சாலை ஒழுங்கிவைத்தலும், மார்க்கத்தில் நிழலுண்டாக்கி வைத்தலும் வேண்டும். மேலும், தண்ணீர்ப் பந்தல் அன்னசத்திரம் முதலியன என்றும் நன்கு நடைபெறநியமித்துவைத்தல்வேண்டும். அடியார்கள் தங்கியிருந்துசிவபூசைசெய்யவும், புராணபடனம்பண்ணவும், சிவாகமசாத்திரங்களை ஓதி உணரவும், உணர்த்தவும், பசிதீர்ந்திருக்கவும்மடங்கட்டிவைத்தலும், பேரறிவையுணர்த்தும்வித்தியாதானஞ்செய்தலும், வேண்டும். இன்னும் ஆலயத்திருப்பணி செய்தலும், நந்தவனம்அமைத்தலும், தலயாத்திரை தீர்த்தயாத்திரைசெய்தலுஞ், சிவபூசைசெய்பவர்க்கு இயன்றவுதவி

செய்தலும், அடியார் பூசைசெய்தலும், ஆலயத்தில் நித்திய பூசை முதலியவைகள் குறைவின்றி நடைபெறச் செய்தலும், ஆலயத்திற் பணிசெய்தலும், சிவ புராணங்களைப் பெரியோர் சொல்ல அன்போடு கேட்டலும், கேட்பித்தலும்வேண்டும். அன்றியும்புஷ்பப்பணிசெய்தலும், ஆலயங்களுக்குப்பால்மாடு, தானஞ்செய்தலும், நித்தியபூசை முதலியவைகளுக்கு விளைநிலங்கொடுத்தலும், ஒவ்வொருநாளும் ஆலயதரிசனஞ்செய்தலும், கடவுளை இடைவிடாது தியானித்துவழிபாடுசெய்தலும் குறிப்பிட்டபுண்ணிய காலங்களிலும் உற்சவகாலங்களிலும் ஆலயதரிசனஞ்செய்தலும் வேண்டும். இன்னும் புண்ணியங்க ளென்றிசைத்த யாவும் உணர்ந்து செய்தவர் இம்மையில் சகலசெல்வங்களையும்பெற்றுச்சகலரும் புகழ எப்பொழுதுங் களிப்புடையராய் நல்ல கீர்த்திகளுடன் எல்லாப் போகங்களையும் அனுபவிப்பார். மேலும் தேவவிமானமூடராய்ச் சகலோபசாரங்களுடன்பஞ்சதுந்துபிகளும் முழங்கச் சுவர்க்காதிபோகங்களினும் மேலாயசிவலோக வாழ்வையும் பெற்று இன்புறுவார்கள்.

இவ்வண்ணம் ஒவ்வொருவரும் அவரவர்களியற்றிய வினைகளாலடையும் இன்பதுன்பங்களை யெண்ணித் தருமராசன் விரத்தனாய்ச்சீவன்முத்தனாக வேண்டுமெனத் திண்ணமான எண்ணங்கொண்டு அது பயக்குந் தவஞ்செய்ய உத்தம க்ஷேத்திரம் யாதென்று ஆராய்வானாயினான். பின்னர், பூவுலகத்தின்கண் பெரிய தேவர்களும் புகழ்ந்து கொண்டாடுந் தவசிரேஷ்டராகிய அகத்திய

முனிவர் வீற்றிருக்கின்ற அகத்தியான்பள்ளியே மேன்மையுடையது என்றுணர்ந்து வேதவனத்தையுற்று அகத்தியான்பள்ளியில் விளங்கும் முனிபுங்கவர்கள் தவஞ் செய்யுங் காட்சியையும் மற்றுமுள்ள விசேஷங்களையுங் கண்டு வியந்துகளிப்படைந்து "நற்றவத்தொண்டர்கூட்டம் பெற்றவர்க்குண்டோ பெறத்தகாதனவே" என்பது உண்மையே யென்று தான்கருதித் தாமும் தவஞ்செய்பவராய்க் காலங்கள்தோறும் முனிவர்குழாம் நீராடும் புண்ணியதீர்த்தமாகிய அத்திரி தீர்த்தத்தில் படிந்து அத்திரி லிங்கத்தையும் அகத்தியேசப் பெருமானையும் பூசித்து அக்கினி புஷ்கரணிக்கு வடக்கே பத்து விற்கடை தூரத்தில் தாம் "தரும தீர்த்தம்" எனத் தம் பெயராலே ஒரு உத்தம தீர்த்தத்தை யுண்டு பண்ணி அதிற் படிந்து அகத்தியேசப் பெருமான் றிருவருளையுன்னி அருந்தவஞ் செய்துவந்தார். ஒரு நாள் யமதருமராசன் பூசித்துத் துதிக்கையில் சோதிமயமாய் எம்பெருமான் பிரசன்னராய் இடபவாகனத்தில், உமாதேவியார் சமேதராகச் சகல கணங்களுந் துதித்துச்சூழக் கிருபாமூர்த்தியாய்க் காட்சிதந்தருளினார். தருமராசன் தரிசித்து மனமுருகிப் பரவசராய் வணங்கித் துதிக்க, அகத்தியேசப்பெருமான் திருவாய்மலர்ந்து "அன்பிற்சிறந்த தருமனே! நீ இயற்றிய தவத்தாற் களிகூர்ந்தோம், உனக்கு வேண்டிய வரம் யாது உரைப்பாயாக" என்றருளத் தருமராசன் "நித்தியானந்தராய் விளங்கும், அந்திவண்ண நாதரே! அகத்தியேசப் பெருமானே! யான் எந்த வினைத்துன்பகளுமின்றிச்சீவன் முத்தனாகவேண்டும்"

என்றுபிரார்த்திக்க, "அவ்வண்ணமே அருள்புரிந்தோம் மேலும் நீ இயற்றிய தீர்த்தத்திற் படிந்தோர் நமது சிவ லோகவாழ்வையும் பெற்று இன்புறுவார்கள்" என்றருளி எம்பெருமான் அகத்தியலிங்கத்தில் அமர்ந்தார்.

தருமராசன் மனமகிழ்ந்து காராரும் ஆணவம் ஒழிந்துச் சிவஞானம் பெற்றுச் சீவன் முத்தரானார். இதுவேயுமன்றி அகத்தியமுனிவர் மனைவியாகிய உலோபாமுத்திரையென்பாள் அகத்தியான்பள்ளியில் சிவலிங்கப் பிரதிஷ்டை பண்ணிப் பூசித்து அகத்தியேசப் பெருமான் றிருவருளால் ஞானைசுவரியம் பெற்றாள் என்று சூதமுனிவர் நைமிசாரணிய வாசிகளுக்கு உரைத்தருளினார். அதனை முனிவர் குழாங்கள் கேட்டு ஆனந்தித்தார்கள்.

யயதருமராசன் சீவன் முத்தித்திறம் பெற்ற

அத்தியாயம் முற்றிற்று.

## துவாதசாதித்தர் பேறுபெற்ற அத்தியாயம்.

தவசிரேஷ்டர்களாகிய நைமிசாரணிய வாசிகளை நோக்கி, துவாதசாதித்தர்கள் அகத்தியான்பள்ளியில் தவஞ்செய்து அகத்தீசப் பெருமான் திருவருளால் ஒளிபெற்றுவிளங்கியசரித்திரத்தைச்சூதமுனிவர் சொல்லுவாராயினர். முனிபுங்கவர்களே! சகல ஆன்மாக்களுக்கும் இம்மை மறுமையே உறுதியாகும். அந்த இம்மை மறுமைப் பயனை அருள்பவர் சடசித்தாதிய பாவுகாண்டற் கரியவரும் ஆன்மாக்களுக்கெல்லாம் அந்தரான்மாவாய் விளங்குபவருமாகியசிவபெருமானேயாகும். அத்தகையதலைவரை யுணர்பவர்களே, மன வாக்குக்காயம் என்னும் மூக்கரணங்களும் ஒருமித்து உண்மையான சிவபத்தியைப் பெறுவார்கள். அப் பத்திமார்க்கத்தைப் பொருந்தி வழிபாடு செய்பவர்களுடைய சஞ்சிதமாதி வினைகளால் உண்டாகும் பிறவித்துன்பங்களைப் போக்குந் தவவேடங்கொண்டு விளங்குகின்ற முனிவர்களே! சூரிய தேவனுனவர் பருவதாகிருதியாய்ச் சகல அலங்காரங்களோடும் விளங்குகின்ற ஒற்றை ஆழியுடைய இரதத்தின்கண்ணே சப்தாசுவமென்னும் பச்சைக்குதிரைபூட்டி அருணன் சாரத்தியஞ்செய்ய, எழுந்தருளி உலகத்துக்குக் கண்ணுய்க் கன்மசாட்சியாய் ஆயிரங் கிரணங்களோடு நாள்தோறும் உதயகிரியில் நின்றும் தோன்றி ஆகாசவீதியின்வழியாய் விளங்கிவருவார். சூரிய மூர்த்தி தயாநிதியாதலால் துஷ்டர்களாகிய அசுரர்கள்வதா

வது வரங்களை வந்து வேண்டி வாங்கி விடுவார்கள் என்று அசுரர்களை அணுக விடாது காப்பவர்களாய் இந்திரன், அக்கினி, யமன் ஆகிய மூவரும் மாடரன், பிங்கலன், தண்டன் என்னும் பெயருடன் அவர்பக்கத்தில் வீற்றிருப்பார்கள். தண்டியென்பவர் சூரியனுடைய வாமபாகத்தில் அமர்ந்து சகல சீவர்களும் இயற்றும் கன்மங்களுக்குச் சாட்சியாய் அக் கன்மங்களை யெழுதிக்கொண்டிருப்பார். உலகத்திற்குப் பிரமதேவர் இராத்திரியாகிய கறுப்புப் புடவை போர்த்து வைத்திருப்பதைச் சூரியன் உதயகால வேளையில் கிழித்துப்போட்டு உள்ளே புகுந்துவருவார். பகற்காலத்தில் வெள்ளைப்புடவையை உலகத்திற்கெல்லாம் போர்த்திருப்பதைச் சூரியன் சாயங்கால வேளையில் கிழித்துப்போட்டு அஸ்தமனமாவார். பிங்கலர்சர்வாலங்காரபூஷிதராய் ஊசியும்நூலும் வைத்துக்கொண்டு அந்த இரண்டு புடவைகளையும் தைத்துக்கொண்டும் தண்டதரராய்க் காவல் செய்துக்கொண்டுமிருப்பார். உலகத்திற்குக்கண்ணுய் விளங்கும் துவாதசாதித்தர்களாகியசூரியன். வைகர்த்தனன் விவஸ்வதன், மார்த்தாண்டன், பாஸ்கரன், ரவி, உலோகப்பிரகாசன், உலோகசாக்ஷி. திருவிக்கிரமன், ஆதித்தன், அம்சுமாலி, திவாகரன் ஆகியபன்னிரண்டுசூரியர்களும்முன்னொருகாலத்தில்தாங்கள் உலகத்தில்சகல ஆன்மாக்களுக்கும்பேருபகாரமாய்ஒளியையுதவி விளங்கவேண்டுமென்றெண்ணினார்கள்.

உலகத்திற்கு உபகாரமாய் உதவும் ஒளியைத்தாங்கள் பெறவேணடும், அதனைப் பெறுவது சுயஞ் சோதியாகிய

சிவபெருமானைக் குறித்துத் தவஞ்செய்து அவர் திருவரு ளாலேயே பெறவேண்டும். ஆதலால் அத்தவஞ் செய்யத் தக்க உத்தமத்தலம் யாதென வாராய்ந்து, உலகத்திற்கு க்ஷேமத்தைச் செய்வதில் சகலலோகங்களையும் இரக்ஷிக் கும் கருணாநிதியாகிய சிவபெருமான், சகலதேவர்களும் முனிவர்களும் உருத்திரர்களும் மற்றும்யாவரும் பிரதான மாய்க்கூடிவிளங்குங்கூட்டத்துள் 'எனக்குச்சமானம்நீயே' யெனத் திருவாய் மலர்ந்தருளப்பெற்ற தவசிரேஷ்டராகிய அகத்திய முனிவர் அருந்தவச் சாலையாய் விளங்கிக்கொண் டிருக்கும் புண்ணியத் தலமாகிய அகத்தியான்பள்ளியே உத்தமதலமாகும்என்று அறிந்தார்கள். அதில்தவஞ்செய்து இம்மை மறுமைப் பயன்களையும் அபீஷ்ட சித்திகளையும் பெற்றவர் எண்ணிலாரென்றுணர்ந்து பன்னிரண்டு சூரியர்க ளும்வேதவனத்தையுற்று, அகத்தியான் பள்ளியில் முனி வர்குழாங்கள் அருந்தவஞ்செய்துவீற்றிருக்கும்காட்சிகளைப் பார்த்துமனங்கசிந்துருகித் தவத்தின் பெருமையைநினைந்து தவத்தை வியந்து தாங்களுந்தவஞ்செய்ய, அங்குள்ள அத் திரி தீர்த்தத்தில் படிந்து அகத்தீசப் பெருமானுக்கு வன்னிமூலையில் நூறு விற்கடை தூரத்தில் பாபமாகிய இருளையோட்டி ஆடினோர்க்கரும் பயனளிக்கும் புண்ணிய வடிவமாய் "துவாதசாதித்த தீர்த்தம்" என ஒரு தீர்த்தத் தைத் தாபித்து அதிலாடி அகத்தீசப் பெருமானைப் பூசோபகரணங்களாகியயாவுங்கொண்டுவிதிப்படி பூசித்துத் துதித்து வலம்வந்து வணங்கி ஒவ்வொரு நாளும் இவ் வண்ணம் அரிய தவத்தைச் செய்தனர்.

இவ்வாறு அருந்தவஞ்செய்துவருங்காலத்து ஒருநாள் கிருபாநிதியாகிய சிவபெருமான் உமாதேவியாரோடும் இடபவாகனத்தின் மீது தோன்றிக் காண்டற்கரிய காட்சி கொடுத்தருளத் துவாதசாதித்தர்கள் கண்களால் ஆனந்தமாய்த் தரிசித்துப் பெரும்பேறு பெற்றவர்களாய் வணங்கித் துதித்துப் பரவசரானார்கள். எம்பெருமான் தனதருமைத் திருவாய் மலர்ந்து, துதித்துப் பரவசராய் நிற்கும் ஆதித்தர்களைநோக்கி "அன்பர்களே! இவ்வண்ணம் எம்மை வழிபட்டவர்களுக்கு எத்தகைய வரமாயினு மருளுவது அரிதன்று; ஆதலால் உங்களுக்கு வேண்டிய வரம் யாது கேட்பீர்களாக" என்றருள. ஆதித்தர்கள் பன்னிருவரும் வேண்டுவார்:—"அகத்தியேசப் பெருமானே! எவர்களானும் மனம் வாக்குக் காயங்களால் கோசரிக்க வொண்ணாத அகண்டாகார சோதிமயமாய்விளங்குங்கருணை வெள்ளமே! அடியேங்கள் பொருட்டு இந்த அரிய திருக்கோலக்காட்சியை யாங்கள் தரிசிக்கும் வண்ணம் அருளிய அருளினும் பெரியதுண்டோ எம்பெருமானே!" என்று துதித்து, "சகல ஜீவர்களுக்கும் உபயோகமாய் யாங்கள் ஒளியையுதவ எங்களுக்குஅருள்பாலிக்கவேண்டும்"என்று வேண்டிக்கொண்டார்கள். அவ்வண்ணமே அகத்தியேசப் பெருமான் அருள்பாலிக்கத் துவாதசாதித்தர்கள்களிகூர்ந்து "இன்னமும், யாங்களியற்றிய துவாதசாதித்த தீர்த்தத்தில் ஆடினோர்க்கு அவர்களியற்றிய தீவினைகளனைத்தையு மொழித்து அவர்களுக்கு வேண்டிய வரங்களையும் அருளவேண்டும்" என்றும் பிரார்த்தித்தார்கள். தலைவரா

கிய சிவபெருமான் துவாதசாதித்தர்கள் விரும்பிக் கேட்டுக்கொண்ட பிரகாரம் அருள் பாலித்து அகத்திய லிங்கத்தில் அமர்ந்தருளினார்.

துவாத சாதித்தரும் அகமகிழ்ச்சி யுடையராய்த் தங்களிருக்கையை யடைந்து சகல ஆன்மாக்களுக்கும் ஒளியை யுதவி உலகத்திற்குக்கண்ணாய்க்கன்மசாக்ஷியாய்ப் பிரசித்தி பெற்று விளங்கினார்கள். முனிவர்களே! துவாத சாதித்த தீர்த்தத்தில் ஆடி அகத்தியேசப் பெருமானைப் பூசித்துப் பாற்பொங்கல் நைவேத்தியஞ் செய்து வழிபாடு செய்து அருளைப் பெற்றவர் எண்ணிலாராகும். அத்திரி தீர்த்தம் அக்கினி புஷ்கரணி துவாதசாதித்த தீர்த்தம் இவைகளிலாடி அகத்தியேசப் பெருமானை வழிபட்டாருக்கு அவர்களியற்றிய கொடிய பாவங்கள் யாவும் ஒழிந்து அளகேச னென்னக் குறைவுபடாத பெருஞ் செல்வங்களையும் பெற்று நிறைந்த ஆயுளையுமடைவார்கள். அன்றியும்வேண்டியவாறு இன்னும் யாவும் பெற்று இன்புறுவார்கள்என்று சூதமுனிவர் சொல்ல நைமிசாரணிய வாசிகள் யாவருங் கேட்டு அன்புடன் பெருமகிழ்ச்சி யுற்றார்கள்.

துவாதசாதித்தர் பேறுபெற்ற அத்தியாயம் முற்றிற்று.

# அக்கினி தேவன் வரம் பெறு அத்தியாயம்

அருட்பெருஞ் செல்வத் தலைவராகிய சூத முனிவர் ஆனந்தபரவசராய்ச்சிரவணானந்தங்கொண்டுவிளங்குகின்ற நைமிசாரணிய வாசிகளாகிய முனிவர்களைப் பார்த்து அக்கினி தேவன் அகத்தியான்பள்ளியில் அருந்தவஞ் செய்து பேறுபெற்ற சரித்திரத்தைச் சொல்லுகின்றேன். அன்புடன் கேட்பீர்களாக வென்று சொல்லுவாராயினர். சுவர்க்க லோகத்தில் அமராவதி என்னும் நகரத்தில் சந்தானம், அரிசந்தனம், மந்தாரம், பாரிசாதம், கற்பகம் ஆகிய ஐந்தருக்களால் விளங்கப் பெற்றதும் உன்னதமான மேடைகளும் மாளிகைகளும் வைசயந்த மென்னும் உப்பரிகையும் பொருந்தி விளங்குவதுமாகிய கோயிலின்கண் சகல அலங்காரங்களோடும் வெகு விசித்திரதரமாய் அமைந்துள்ள சுதர்மா வென்னும் தேவசபையில் சிங்கங்களால் தாங்கிய உயர்ந்த நவரத்தின சிம்மாசனத்தின் மீது இந்திராணி நாயகராகிய தேவேந்திர மகாராசன் கொலுவில் வீற்றிருந்தனன். சிந்தாமணி, காமதேனு, கற்பக தருவாதிய யாவும் சுவர்க்க லோகாதிபதியாகிய அரசன் எந்தச் சமயத்து என்னநோக்கங்கொள்ளுமோ எதைக்கருதிவிரும்புமோ வென்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கவும், அழகு விளங்குந் திருமேனியும் இமைத்த லில்லாத கண்ணும் கவலை சிறிதுமில்லாத உற்சாகமான மனவெழுச்சியுமுடைவராய்ச் சர்வாலங்கார பூஷிதராய் விளங்குந் தேவர்கள்

துவாதசாதித்தர்கள், அஷ்டவசுக்கள், விசுவதேவாள், துஷிதாள், ஆபாசுவராள், அனிலர்கள் முதலிய சகல தேவர்களும், சித்தசாத்தியர்கள் முதலிய யாவருங் கூடி யிருக்கவும், ரம்பை, ஊர்வசி, திலோத்தமை, கிருதாசி மஞ்சுகோஷா, மேனகை முதலிய தேவகணிகைமாதர்கள், ஆடல், பாடல் ஆதிய விநோதங்களை யியற்றவும் இதனைச் சபையிலுள்ளோர் யாவரும் கண்டும் கேட்டுங்களித்து அள விலாப்பெருமகிழ்ச்சியுடையவர்களாய்வீற்றிருக்கும்போது அவர்களனைவருங் கூடி ஒன்றைக் கருதுவாராயினார்கள்.

வேதத்தில் விதிக்கப்பட்ட யாகங்கள் பலவாகும். அந்த யாகங்கள் தோறும் நமக்காகவுதவும் அவிர்ப்பாகத் தைத் தேவர்களிலொருவரே பிரசன்னராய் நின்றேற்று அதனையாவருங் கொள்ளும்படி உதவத்தக்கவர் யாவரென ஒருவரை யொருவர் கலந்து ஆலோசனை செய்தார்கள். அச் சமயத்தில் யாகங்க ளெல்லாவற்றினும் பிரமதேவர் அருளால் அவியுரிமையுடைய அக்கினிதேவனைக் கருத, அக்கினிதேவன், இந்த மகாசதசில் தன்னைக் கருதிய சூழ்ச் சியை யுணர்ந்து தாம் முன்னரே தவஞ்செய்து அருள் பெற்ற ஞாபகந்தோன்ற இந்திரன் முதலிய தேவர் களைப் பார்த்து தேவர்காள்! நீங்கள் கருதிய வண்ணம் நான் வேதவனத்தில் விளங்கும் அகத்தியான் பள்ளியைச்சேர்ந்து அங்கு அரியதவஞ்செய்து அகத்தியே சப் பெருமான் திருவருளால் யானே, யாகங்கள் தோறுஞ்

சென்று யாவருக்கும் உதவும் அவிர்ப்பாகத்தை அவரவர்கட்கு ஏற்றுஉதவுவேன் என்றுகூறினான்.

இவ்வண்ணஞ் சொல்லக் கேட்ட இந்திரன் முதலிய தேவர்களனைவரும் அக்கினி தேவனை நோக்கி 'அக்கினியே! நீ நவின்றது நன்று, நன்று' என்று புகழ்ந்து கொண்டாடினார்கள். அப்பொழுது அக்கினிதேவன் தேவர்களிடத்தில் அனுமதி பெற்றுக்கொண்டு பூலோகத்திற்கு வந்து, சோலையினின்றுஞ் சொரிகின்றதேன் ஆறய்ப் பெருகியோடுவதும் அன்னப் பறவைகள் தங்கும் தாமரைத் தடாகங்களால் சூழப்பெற்றதுமான வேதவனத்தில் விளங்கும் அகத்தியான்பள்ளியை யுற்று அங்கு யாதொரு பற்றுமின்றிக் கோபத்தையொழித்து அயர்ச்சியின்றி அறிவிற் சிறந்து தவத்திற்குரிய கோலமும் மனவொழுக்கமும் உடையராய்த் துன்பந் தோன்றுமல் தவத்துறு செயல் யாவும் இன்பமாய்க் கொண்டும், தேனினுமினிய தமிழ் மொழிக்குத் தலைவராயும் தவசிரேஷ்டராயும் விளங்கும் அகத்திய முனிவரைக் கண்டு களித்து, ஞானமே திருமேனியாய் விளங்கும் அகத்தீசப் பெருமானையும் வாமபாகேசுவரி என்னும் பாகம் பிரியாளம்மையையுந் தரிசித்து வணங்கி வலஞ் செய்து துதித்து அன்புடன் எம் பெருமான் திருவருளால் சன்னிதியில் தன்பெயரால் அடினோர்க்கு இஷ்ட சித்திகளை யருளத்தக்க தடாகமொன்றை அமைத்து, அத்தீர்த்தத்தால் அகத்தீசப் பெருமானுக்கு அபிஷேகஞ் செய்து பூசோபகரணங்களாயுள்ள புஷ்பம்,

சந்தனம் முதலிய யாவுங்கொண்டு, நிறைந்த பேரன் போடும் விதிப்படி பூசித்து இனிய புகழ்ச்சி வாக்கியங்க ளால் துதித்து வலம் வந்து வணங்கி உள்ளத்தில் அகத்தி யேசப் பெருமானைத் தியானித்துச் சமாதிபரராய் வீற்றி ருந்து அருந்தவ மியற்றுவாராயினன்.

ஒவ்வொரு நாளும் நியமமாய் இவ்வாறு பூசித்து அருந்தவஞ் செய்து வரும்போது ஒருநாள் அக்கினி தேவனுக்கு அகத்தியேசப் பெருமான் அருள்செய்வாராய்ப் பூங்கொடிபோலும் நுட்பமாகிய இடையினையுடைய உமா தேவியாரை இடப்பாகத்திற்கொண்டு விளங்கிச் சிவபெரு மான் விபூதியால் உத்தூளனஞ் செய்து தேசோன்மயமான திருமேனிப் பொலிவுடையராய் அக்கினிதேவன் காணும் வண்ணம் இடபவாகனத்தின் மீதெழுந்தருளிச் சகல வைபவ முழக்கங்களோடும் காட்சி கொடுத்தருளினர். அரு ளிய எம்பெருமான் அக்கினிதேவனை நோக்கி "அக்கினியே! நீ அன்பினுற் செய்த பூசையாலும் ஆற்றுதற்கரியதாய் நீ இயற்றிய தவத்தாலும், நீதாபித்த அக்கினி புட்கரணி நீரால் அன்புடன் எமக்கு அபிஷேகஞ் செய்ததாலும், நீ நம்பால் வைத்த உண்மை யன்பாலும் மிகுந்த மகிழ்ச்சி யுற்றோம்; நம்பால் உனக்கு வேண்டிய வரம்யாது இசைப் பாயாக; அருளுவோம்" என்று திருவாய் மலர்ந்தருள, சமாதியி லமர்ந்திருந்த அக்கினிதேவன் தன்கண்ணை விழித்தெழுந்து சரீரம் புளகாங்கிதங் கொள்ளக் கண்களி னின்றும் ஆனந்தவாரி மழைபோற் பொழிய மனமுருகிப்

பூமியிற்படிந்து பன்முறை சாஷ்டாங்கமாய் வணங்கி உள்ளே உண்ட சிவானந்தம் மிகுந்து மேலெழுந்தாலென்னத் துதிப்பாராயினன். "ஐயனே, அமுதே, எனையாண்டவரசே, செய்யமேனியனே; சிவனே, சோதியே, சிற்பரத் தெளிவே, செங்கண்மால் விடையாய், கும்பமா முனிக்கருள் விமலா, போற்றி என்று இன்னும் பல துதிமொழிகளாலுந் துதித்து அருட்பெருங்கடலே! அகத்தியேசா! யாவருமியற்றும் சகல யாகங்களிலும் தேவர்களுக்காகவுதவும் அவிர்ப்பாகத்தை யானேயேற்று அதனைத் தேவர்கள் மகிழ்ச்சியுற அவர்களுக்குதவுந் தன்மையை அடியேனுக்கு அருளவேண்டும். அன்றியும் அடியேனியற்றிய அக்கினி புட்கரணியில் ஆடி நம்மைத் தரிசித்தவர்களுக்கு வினைவசத்தால் வரும் எல்லாத் துன்பங்களையும் ஒழித்துச் சகல இன்பங்களையும் நல்ல கீர்த்தியையும், அழகையும், அழிவில்லாதநிறைந்தசெல்வமும் குணத்தையும்கற்புக் குணம்நிறைந்தவழகுடைய மனைவியையும் அறிவிற் சிறந்த நல்ல புத்திரனையும் இனிது மகிழ்ச்சியுடன் வாழும் வாழ்வையும் அருளுவதே அடியேனுக்கு அருளும் அருளாகும்" என்று வேண்டிக்கொள்ள, அழகிற் சிறந்த உமாபதியாகிய அகத்தியேசப் பெருமான் திருவாய் மலர்ந்து "அக்கினியே! நீ வேண்டிய வண்ணம் யாவும் ஈந்தோம், அன்றியும் சித்திரை மாதம் சுக்கிலபக்ஷம் சப்தமி யன்று அலை வீசுகின்றதும் சூற்சங்குகள் சப்திக்கின்றதுமாகிய அக்கினி தீர்த்தத்திலும், அக்கினி புட்கரணியிலும் அன்புடன் ஆடினோர் சகல செல்வங்களையும் பெற்று இன்னும் இம்மையில்

வேண்டியயாவும்உடையராய் இனிதுவாழ்வார்கள். மேலும் முத்தியின்பமும் பெற்றின்புறுவார்கள்'' என்று அக்கினி தேவனுக் கருளி, தேவாதிதேவனுகிய சிவபெருமான் அகத்தியலிங்கத்தில் அமர்ந்தருளினுர்.

அருள்பெற்ற அக்கினிதேவன் எம்பெருமான் திருவருளால் அகமகிழ்ச்சியுடன் தேவலோகத்திற்குச் சென்று இந்திரன் முதலிய தேவர்களனைவருக்கும் தாம் பெற்ற பேறு யாவுமுரைக்க, யாவர்களும் அளவளாவிப் பெருமகிழ்ச்சி யுடையராயினிதுற்ருர்கள் என்றுசூதமுனிவர் சொல்லி அக்கினி தீர்த்தத்திலும் அக்கினி புஷ்கரணியிலும் ஆடி அகத்தியேசப் பெருமான் திருவருளால் இம்மையில் சகல செல்வங்களும் பெற்று அகமகிழ்வோடும் இனிது வாழ்ந்து மேலே இந்திர பதமும் பிரமபதமும் திருமால் பதமும் இனிது மேவி முத்தியின்பமும் பெற்றவர் எண்ணிலாராகும். அன்றியும் அகத்தியேசப் பெருமான் திருவருளை வேண்டி அகத்தியான்பள்ளியை யுற்று

* அனலவன் றீர்த்த மூழ்கி வகத்திய வீசர்க் கன்பால்
புனன்மலி பழனப் பேரூர் புனிதவான் பொருவில் சாந்த
மினுமணிப் பூண்பட் டாடை விரைமலர் மாலை யீந்தோர்
மூனயலி சோபு ராதி திருப்பணி முறையிற் செய்தோர்.

* சேயிதழ்க் கமலம் போலும் சேவடி பணிந்தார் யாரும்
பாய்திரைப் புடவி சூற்றும் பரித்துப்பின் பரிந்த போக

---

* வேதாரணிய புராணத்திலுள்ளது,

யேயிருஞ் சுவர்க்க மேவி வேண்டிய வின்ப மார்ந்து
தாயினு மினியான் செய்ய சரணிழற் றங்கி வாழ்வார்.

* அத்திரி யிதனின் மூழ்கி யந்திவண் ணனையும் போற்றி
பத்தியிற் பணிந்து மூவர் தமைப்பெறும் பதத்திற் சேர்ந்தான்
சித்திகண் ணுவனே யாதி முனிவரர் சேர்ந்தா ரீது
முத்திநல் வழியாமாடி முனிதொழு முதலைப் போற்றின்.

என்று அக்கினிதேவன் பேறுபெற்ற புண்ணிய சரித்திரத்தைச் சூதமுனிவர் சொல்லி நைமிசாரணிய வாசிகளாகிய மகரிஷிகளே! சர்வாபீஷ்ட சித்திப் பிரதமாய் விளங்கும் இதனை யான் சொல்லியதால் யானும் உய்ந்தேன். உத்தமர்களாகிய நீங்களும் அன்புடன்கேட்கப் பெற்றதால் நீங்களும் உய்ந்தீர்கள் என்று சொல்லி சூதமுனிவரும் தவச் செல்வர்களாகிய முனிவர்களும் அனல்வாய்ப்பட்ட வெண்ணெயென மனம் நெக்கு நெக்குருகிச் சரீரம் புளகாங்கிதராய் அரஹர முழக்கஞ்செய்து கண்களினின்றும் ஆனந்த வாரி சொரிய பரமானந்த பரிதராஞர்கள்.

* என்னவுயர் தவச்சூத னிசைத்திட நைமிசத்
தவத்தோ ரெழுந்து மேலோன்
பொன்னடித் தாமரைபோற்றிப் பூசை
புரிந்தருந் தவத்தோய் பொருவில் காதை
பன்னரிய கதியெளிதே பயப்ப வருளினை
நோன்பின் பயனும் பெற்ரோ

---

* வேதாரணிய புராணத்திலுள்ளது.

முன்னவனு மருள்புரிந்தா னினிக் குறையு மொன்
றுமிலே முனிவ வென்றே.

என்று புகழ்ந்து கொண்டாடிப் பெருமகிழ்ச்சி யுற்றார்கள்.

அக்கினிதேவன் வரம்பெற்ற அத்தியாயம் முற்றிற்று.

சீர்பெறு மகத்தி யன்றன் றிருப்பாழி மேன்மை கேட்போ
ரேர்பெறு செல்வங் கல்வி யெழின்மனை மக்கள் சீர்த்தி
பாரெலாம் புகழப் பெற்றுப் பரிவொடே யென்றும் வாழ்வா
ராரெனும் போற்று மெம்மா னடிநிழ லமர்ந்தும் வாழ்வார்.

திருவகத்தியான்பள்ளி மான்மியம் முற்றுப்பெற்றது

திருச்சிற்றம்பலம்.

# திருவகத்தியான்பள்ளி

## திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

பண்-சாந்தாரம்.

திருச்சிற்றம்பலம்.

வாடியவெண்டலை மாலைசூடி மயங்கிரு
ணீடுயர்கொள்ளி விளக்குமாக நிவந்தெரி
யாடிய வெம்பெரு மானகத்தியான் பள்ளியைப்
பாடியசிந்தையி னார்கட்கில்லையாம் பாவமே. (௧)

துன்னங்கொண்ட வுடையான்றுதைந்த வெண்ணீற்றினா
மன்னுங்கொன்றை மதமத்தஞ்சூடினான் மாநக [ண்
ரன்னந்தங்குபொழில் சூழகத்தியான் பள்ளியை
யுன்னஞ்செய்த மனத்தார் கடம்வினை யோடுமே. (௨)

உடுத்ததுவும் புலித்தோல் பலிதிரிந் துண்பதுங்
கடுத்துவந்த கழற்காலன் றன்னையுங்காலினா
லடர்த்ததுவும்பொழில் சூழகத்தியான் பள்ளியான்
றொடுத்ததுவுஞ் சரமுப்புரந் துகளாகவே. (௩)

சாய்ந்ததுவுமன்று காமனைநெற்றிக் கண்ணினாற்
பாய்ந்ததுவுங்கழற் காலனைப்பண்ணி னான்மறை
யாய்ந்ததுவும்பொழில் சூழகத்தியான் பள்ளியா
னேய்ந்ததுவு மிமவான்மக ளொருபாகமே. (௪)

போர்த்ததுவுங்கரி யின்னுரிபுலித் தோலுடை
கூர்த்ததோர்வெண் மழுவேந்திக்கோ ளரவம்மரைக்

சார்த்ததுவும்பொழில் சூழத்தியான் பள்ளியான்
பார்த்ததுவும் மரணம்பட ரெரிமூழ்கவே. (௫)

தெரிந்ததுங்கணை யொன்றுமுப்புரஞ் சென்றுட
னெரிந்ததுவுமுன் னெழிலார் மலருறைவான்றலை
யரிந்ததுவும் பொழில்சூழகத்தி யான்பள்ளியான்
புரிந்ததுவு முமையாளோர் பாகம்புனைதலே. (௬)

ஓதியெல்லாமுலகுக் கொரொண் பொருளாகிமெய்ச்
சோதியென்று தொழுவாரவர் துயர்தீர்த்திடு
மாதியெங்கள் பெருமானகத்தி யான்பள்ளியை
நீதியாற்றொழு வாரவர்வினை நீங்குமே. (௭)

செறுத்ததுவுந் தக்கன்வேள்வியைத் திருந்தார்புர
மொறுத்ததுவு மொளிமாமல ருறைவான்சிர
மறுத்ததுவும்பொழில் சூழகத்தி யான்பள்ளியா
னிறுத்ததுவுமரக் கன்றன்றோள் களிருபதே. (௮)

சிரமுநல்லமதிமத்த முந்திகழ் கொன்றையு
யரவமல்குஞ்சடை யானகத்தி யான்பள்ளியைப்
பிரமனோடு திருமாலுந்தேடிய பெற்றிமை
பரவவல்லா ரவர்தங்கண் மேல்வினைபாறுமே. (௯)

செந்துவராடை யினாரும் வெற்றரையேதிரி
புந்தியிலார்களும் பேசும்பேச்சவை பொய்ம்மொழி
யந்தணனெங்கள் பிரானகத்தி யான்பள்ளியைச்
சிந்தியினும் வினையானவை சிதைந்தோடுமே. (௧௦)

ஞாலமல்குந் தமிழ்ஞான சம்பந்தன் மாமயி
லாலுஞ்சோலை புடைசூழகத்தி யான்பள்ளியுட்
சூலநல்லபடை யானடிதொழு தேத்திய
மாலைவல்லா ரவர்தங்கண்மேல் வினைமாயுமே. (௧௧)

திருச்சிற்றம்பலம்.

சுவாமி திருநாமம்——அகத்தீசுவரர்
தேவி திருநாமம்——பாகம்பிரியாளம்மை
ஸமஸ்கிருதநாமம்——வாமபாகேசுவரி.

FIRST EDITION] JULY 1933 [1000 COPIES

# குறிப்பகராதி.

அகத்தியான்பள்ளி—வேதாரணியத்திற்குத் தெற்கே ஒரு குரோச தூரத்திலுள்ளது. அகத்தியான் பள்ளிக்குத் தெற்கே நாலரைமயில்தூரத்தில்குளகர்கோயில்என்னும் பாடல்பெற்ற தலமுள்ளது நவகோடிசித்தாச்சிரமம். என்னும் பெரிய ஆரணியமும்உள்ளது. அதில் பலவிசேஷங்களும் காணப்படுவதும் உண்டு. அன்றியும் ஆதி சேதுவும் விளங்கும்.

அகத்தீசுவரர் — அகத்தியமுனிவர்பூசித்தருள் பெற்றது. அந்திவண்ணநாதர் என்றும் கூறப்பட்டுள்ளது.

அகத்தீய தீர்த்தம்—அகத்தியேசுவரருக்கு அதிசமீபத்தில் மேல்புறமுள்ளது.

அக்கினி தீர்த்தம்—அகத்தீயேசுவரர் சன்னிதியில் கிழக்கே சுமார் ஒரு மயில் தூரத்திலுள்ள சமுத்திர தீர்த்தம்.

அக்கினி லிங்கம்—அக்கினி தீர்த்தக்கரையிலுள்ளது. ஷை அக்கினி தீர்த்தக்கரையில்பரான்னேசர், பரத்திரவியேசர்பிரதிக்கிரகேசர்என்ற, மூன்றுலிங்கங்களும்உள்ளதென வேதாரணியபுராணத்தில்கூறப்பட்டிருக்கிறது.

அத்திரி தீர்த்தம்—அகத்தியேசுவரருக்குமேற்கே நூறுவிற்
கடை தூரத்திலுள்ளது.

அத்தீரீசுவரர்— அத்திரி தீர்த்தக்கரையிலுள்ளது.

யமதரும தீர்த்தம்—அக்கினி புஷ்கரணிக்கு வடக்கேபத்து
விற்கடை தூரத்திலுள்ளது.

துவாதசாதித்ததீர்த்தம்-அகத்தி யேசுவரருக்கு வன்னிமூலை
யில் நூறு விற்கடையிலுள்ளது.

அக்கினிபுஷ்க்கரணி-அகத்தி யேசுவர சன்னிதியில் விளங்
கும் தீர்த்தம்.

கண்ணு வேசன்—உலோபாமுத்தீரீசன் என்னும் இரண்டு
மூர்த்திகளும் அகத்தியராச்சிரமத்தில்
கூறப்பட்டிருக்கிறது.

ரிப்பன் புஸ்தகசாலை, 87, தம்புசெட்டி வீதி, சென்னை

பரஞ்சோதி முனிவர் அருளிச்செய்த

# வேதாரணிய புராணம்

சருக்கம் 18 செய்யுள் 1178 அடங்கியது:

விலை ரூபா 1

சுத்த ஷாட்குண்ய பரமாகாச சுயம்பிரகாச சொரூபியாய் விளங்கும் சிவபெருமான் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு அருள் வடிவாகிய சிவலிங்கத் திருமேனி கொண்டெழுந்தருளிய சிவக்ஷேத்திரங்கள் பலவற்றுள் மிகச்சிறப்புற்று விளங்குவது ஸ்ரீ வேதாரண்ய க்ஷேத்திரமென்று எவருமறிவர். இச் சிறந்த ஸ்தலபுராணத்துள் அடங்கியுள்ள சருக்கங்களாவன:—

(1) முகவுரைச் சருக்கம் (2) தலவிசிட்டச் சருக்கம் (3) இலிங்கோற்பத்திச் சருக்கம் (4) மணிகன்னிகைச் சருக்கம் (5) வேதநதிச்சருக்கம் (6) கோடிதீர்த்தச் சருக்கம் (7) மணவாளச் சருக்கம் (8) புவனிவிடங்கச் சருக்கம் (9) வீரகத்திச் சருக்கம் (10) பிரமசாரிச் சருக்கம் (11) கோலாகலச் சருக்கம் (12) மாவலிச்சருக்கம் (13) சௌதாசச் சருக்கம் (14) விசுவாமித்திரச் சருக்கம் (15) குளாகேசச் சருக்கம் (16) தனபாலச் சருக்கம் (17) தேவர்தொழு முன்றச் சருக்கம் (18) தீர்த்தமூர்த்திச் சருக்கம் என்பன.